
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

இரட்டை வேடதாரிகளின் ஐக்கிய முன்னணி

1-15 ஆகஸ்டு '96

ரூ. 3.50



www.padippakam.com

# வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம் வெற்றி!

## புரட்சிகரப் போராட்டத்தில் புதிய அத்தியாயம்!

தமிழக சட்டசபை மற்றும் பாராளுமன்றத் தொகுதி தேர்தலில் அ.தி.மு.க. மண்ணைக் கவ்விய பின், வெற்றி பெற்ற தி.மு.க.வும், த.மா.கா.வும், இக்கூட்டணிக்கு ஆதரவு தந்த தமிழகப் பத்திரிகைகளும் ஜெயாவிற்குத் தமிழக மக்கள் தகுந்த தண்டனையளித்து விட்டதாக வழமையான பல்லவியைப் பாடத் தொடங்கின. அச்சமயத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.), புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு.), விவசாயிகள் விடுதலை முன்னணி (வி.வி.மு.) - இம்மூன்று அமைப்புகளும் இணைந்து, "தேர்தல் தோல்வி தண்டனையாகாது; ஜெயா - சசி கும்பலை உடனே கைது செய்ய வேண்டும்; தனி நீதிமன்றம் வைத்து விசாரித்துத் தண்டிக்க வேண்டும்; அக்கும்பல் வளைத்துப் போட்டுள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்து, மக்கள் சொத்தாக அறிவிக்க வேண்டும்" என்ற சரியான முழக்கங்களை முன் வைத்தன.

### போராட்ட அறிவிப்பும் பிரச்சாரமும்

இம்முழக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் முகமாக, ஜூலை 10-ந் தேதியன்று தஞ்சாவூரிலுள்ள ஜெயா - சசிகலாவின் பினாமி சொத்தான வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டத்தை இவ்வமைப்புகள் அறிவித்தன. ஜூன் முதல் நாள் தொடங்கியே தமிழகமெங்கும் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது.

"சட்டம் தானாக கடமையைச் செய்ததாக வரலாறில்லை; கொலைக் குற்றத்தை விடக் கொடிய பொருளாதாரக் குற்றங்கள் புரிந்துள்ள ஜெயா - சசிகலா கும்பலைத் தண்டிக்கும் உரிமை மக்களுக்குத்தான் உண்டு" என விளக்கி, ஒரு லட்சத்திற்கும் அதிகமான துண்டுப் பிரசுரங்களைத் தமிழகமெங்கும் விநியோகித்தன இவ்வமைப்புகள்.

மேலும் கடந்த ஐந்தாண்டுகளில் ஜெயா கும்பல் தமிழகமெங்கும் வளைத்துப் போட்டுள்ள நிலங்கள், தோப்புகள், காபி - தேயிலை எஸ்டேட்டுகள்; உல்லாசமாக ஓய்வெடுக்கக் கட்டப்பட்ட பளிங்கு கல் பதித்த மாளிகைகள்; பினாமிகளின் பெயரில் தொடங்கப்பட்ட ஆலைகள்; தமிழகத்தைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்து பெறப்பட்ட கையூட்டுகள்; உள்நாட்டு - வெளிநாட்டு முதலீடுகள் - என இக்கும்பல் புரிந்துள்ள பொருளாதார - கிரிமினல் குற்றங்களில் அம்பலமானவற்றைத் தொகுத்து 16 பக்க அளவில் சிறு வெளியீடொன்றும் கொண்டு வரப்பட்டது.

இச்சிறு வெளியீடு அடுத்தடுத்து நான்கு பதிப்புகளில் 70,000 பிரதிகள் அச்சிடப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டன. இது ஒன்றே இப்போராட்டம் மக்கள் மத்தியில் எத்துணை ஆதரவைப் பெற்றிருந்தது என்பதற்கு சாட்சி. மேலும் சுவரெழுத்து, தெருமுனைப் பிரச்சாரம், பேருந்துப் பிரச்சாரம், பொதுக்கூட்டங்கள், கேலிச் சித்திரங்கள் என அனைத்து வழிகளிலும் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்றது.



மருத்துவமனையைக் கைப்பற்றிய பின்னர் போலீசின்தாக்குதலைக்கண்டித்து சாலை மறியல்

குறிப்பாக சென்னையிலும் தஞ்சையிலும் இவ்வமைப்பின் செயல் வீரர்கள் ஜெயா - சசிகலா போல் பட்டாடை - நகைகள் பளபளக்க வேடமணிந்து, அவர்களைச் சாட்டையால் அடித்து இழுத்துச் செல்வதுபோல் நகரெங்கும் நடத்திய தெருமுனைப் பிரச்சாரம் மக்கள் மத்தியில் மிகுந்த ஆதரவைப் பெற்றது. ஜெயாவின் புதிய ஊழல்கள் சுவர் செய்தித்தாள் எனும் புது வடிவத்தில் அச்சிடப்பட்டு, தமிழகமெங்கும் ஒட்டப்பட்டன.

### எதிரிகளின் கலக்கம்

சுவரெழுத்துகளே மக்கள் மத்தியில் பரபரப்பையும் எதிரிகளின் மத்தியில் பீதியையும் ஏற்படுத்தின. வினோதகன் மருத்துவமனையின் சார்பாக ஜூன் முதல் வாரத்திலேயே திருச்சி - தஞ்சை மாவட்ட தினசரிகளில் விளம்பரமொன்று வெளியிடப்பட்டது. "வினோதகன் மருத்துவமனை சசிகலாவுக்குச் சொந்தமானதல்ல; சட்டபூர்வ இயக்குநர்களுக்குச் சொந்தம்; இறந்து போன சசிகலாவின் சகோதரர் இம்மருத்துவமனையில் நிர்வாக இயக்குநராக இருந்ததால் அவரின் நினைவாக பெயரிட்டுள்ளோம்" என அரைகுறை உண்மைகளை வெளியிட்டு, "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" எனக் காட்டிக் கொண்டனர், ஜெயா - சசிகலாவின் பினாமிகள்.

போராட்ட நாள் நெருங்க நெருங்க வெருண்டு போன இப்பினாமிகள் மருத்துவமனையில் அடியாள் கும்பலை இறக்கினர்; மறுபுறம் போராட்டம் பற்றிய அவதூறு செய்திகளைத் தமிழக மஞ்சள் பத்திரிகைகளின் மூலம் பரப்பினர். தமிழக கிசுகிசு பத்திரிகைகளிலேயே பிரபலமான ஜூனியர் விகடன், "போராட்டத்தை ஒப்புக்காக நடத்தப் போவதாக, ம.க.இ.க. தோழர். காளியப்பன் மருத்துவமனையின் இயக்குநரிடம் தெரிவித்துள்ளதாக" பொய்ச் செய்தியொன்றை வெளியிட்டது. அப்பத்திரிகை அலுவலகத்திற்கு நேராகச் சென்று, தோழர்கள் இவ்வதந்திக்கு மறுப்பு செய்தி கொடுத்ததை, பிரசுரிக்காது இருட்டடிப்பு செய்தது, ஜூ.வி. "ஏவுகணை" என்ற மற்றொரு பத்திரிகை, "ம.க.இ.க. உள்ளூர் தி.மு.க. பிரமுகர் ஒருவரிடம் காசு வாங்கிக் கொண்டு, போராட்டத்தை நடத்துவதாக" தனது அபாரக் கண்டுபிடிப்பை வெளியிட்டிருந்தது.

### ஜூன்: 10 தமிழகத்தில் புதிய அத்தியாயம்

ஜூலை 10 அன்று தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள மாரீஸ் கார்னர் எனும்

தொடர்ச்சி பின் அட்டையில்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 11

இதழ்: 17-18

16 ஜுலை '96 - 15 ஆக '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
தபால் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## காமராஜர் ஆட்சியின் யோக்கியதை? மூப்பனாரின் முகவிலாசம்!

"வரும் தேர்தலில் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம்" என்று கடந்த மாதம் தமிழ் மாநிலக் காங்கிரசின் முதல் மாநாட்டைத் திருச்சியில் கூட்டிய அக்கட்சியின் நிறுவனமும் தலைவருமான கோந்தசாமி கருப்பையா மூப்பனார் சபதமெடுத்துள்ளார். அதேசமயம், "அரசியலுக்கு வருவது சந்நியாசம் போவதற்காக அல்ல; ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான். திருச்சி மலைக்கோட்டையிலிருந்து சென்னை புனித ஜார்ஜ் கோட்டை நோக்கிச் செல்வதுதான் லட்சியம்" என்று பச்சையாகவே கபிஸ்தம் பண்ணையார் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இப்படிச் சபதமேற்பதற்கும், இலட்சியப் பிரகடனம் செய்வதற்கும் எந்தவொரு கட்சித் தலைவருக்கும் உரிமையிருக்கிறதுதான்! ஆனால் மூப்பனாருக்கு அந்த வாய்ப்பளிப்பதற்கு முன் தமிழ்நாட்டு மக்கள் இரண்டு கேள்விகளை எழுப்பிப் பரிசீலித்தாகவேண்டும். பயாசுக்கோப்பு படம் காட்டுவதைப் போல தேர்தலுக்குத் தேர்தல் தமிழ்நாட்டு காங்கிரசுக்காரர்கள் முன்னுதாரணமாய்க் காட்டும் அந்தக் காமராஜர் ஆட்சியின் மகிமைதான் என்ன? தற்போது தமிழ்நாட்டின் ஆட்சி உரிமைகோரும் இந்த மூப்பனாரின் முகவிலாசம் தான் என்ன?

"காராஜர் ஆட்சி என்றால் என்ன?" என்பதைப் பழைய தலைமுறையினர் மறந்துபோயிருப்பார்கள், புதிய தலைமுறைக்குத் தெரியாது என்கிற காரணத்தால் அதற்குப் பொய்யான விளக்கமளித்து தமிழ்நாட்டு மக்களை ஏய்க்கும் முயற்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையென்றால் 1967 தேர்தல்களில் காங்கிரசு மட்டுமல்ல, காமராஜரே மண்ணைக் கவ்வியது ஏன்? அதன்பின் அடுத்தடுத்து தமிழக மக்களால் நிராகரிக்கப்பட்டும், ஏதாவது ஒரு திராவிடக் கட்சியின் தயவினால் மட்டுமே தேர்தல்களில் வெற்றி பெற முடிவதும் ஏன்? அரசின் "ரேஷன்" கடைகளில் "அவுன்சு" அரிசிக்கும் மக்கள் காத்துக் கிடந்ததும், வாரத்தில் ஒருநாள் பட்டினி கிடக்கும்படி உபதேசித்ததும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியதும், முதுகுளத்தூர் கமுதி சாதிக் கலவரங்களைத் தூண்டியதும், கூலி உயர்வு கேட்ட தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்றதும், தமிழின மொழி உணர்வை நசுக்கியதும், அதை எதிர்த்துப் போராடிய மாணவர்களைப் படுகொலைகள் செய்ததும், காமராஜருடைய, அவருடைய ஆசிபெற்ற காங்கிரசின் ஆட்சிக் காலங்களில் தான்.

பெரு முதலாளிகளின் விருந்தினர் மாளிகைகளிலும் பெரும் மிட்டா - மிராசுகளின் பண்ணை வீடுகளிலும் பேரங்களும் சாதி அரசியலும் கட்டைப் பஞ்சாயத்தும் நடத்தியவர்தான் காமராஜர். நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார், திருவாரூர் தியாகராஜ முதலியார், மணலி ராமகிருஷ்ண முதலியார், குன்னியூர் அய்யர், வலிவலம் தேசிகர், பூண்டி வாண்டையார், கபிஸ்தலம் மூப்பனார், கும்பகோணம் காசிராம அய்யர், மன்னார்குடி தென்கொண்டார், புதுக்கோட்டை தொண்டைமான், போடி சுப்பராஜா, விருதுநகர் ராமசாமிநாடார், சிவகாசி அய்ய நாடார, மதுரை சுப்புராமன், கரியமாணிக்கம் அம்பலம், ஆர்.எஸ். மங்கலம் ராமகிருஷ்ணத் தேவர், சேலம் ராமசாமி, காஞ்சி நடேச முதலியார், வேலூர் தட்சிணாமூர்த்தி முதலியார், கோவைத் தொழிலதிபர்களான நாயுடுக்கள், — இப்படி காமராஜரின் அரசியல் சூத்திரதாரிகளாக விளங்கிய பெரும் முதலாளிகள், பெரும் வியாபாரிகள், பெரும் பண்ணை நிலப் பிரபுக்களின் பட்டியல் வெகு நீளமானது.

காமராஜர் ஆட்சியில் ஆலைகள், நிறுவியதும், அணைகள் கட்டியதும், சாலைகள் போட்டதும், பள்ளிகள் நிறுவியதும் இன்னபிறவும் இவர்களின் நலனுக்காகத் தான்; சாமானிய மக்களுக்காகவே அல்ல, என்பதை கொஞ்சம் பொருளாதார விவரங்களும், வரலாற்று உண்மைகளும் அறிந்த அனைவரும் ஒப்புக் கொள்வர். இவர்களையே தேர்தல்களில் நிறுத்தி, சாதிப் பிரமுகர்களை வைத்து ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டி வெற்றிலையில் சத்தியம் வாங்கி காங்கிரசுக்கு ஓட்டுப் போடும்படி செய்வதே காமராஜரின் அரசியலாக இருந்தது. பெரும்பண்ணைகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நில உச்சவரம்பு சட்டம் பேசி பித்தலாட்டம் செய்தார். பெரு முதலாளிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஜனநாயக சோசலிசம் பேசி மோசடி செய்தார். "காகிதப்பூ மணக்காது காங்கிரசு சோசலிசம் பலிக்காது" என்பதை மக்கள் உணர்ந்து கொண்டபோது காமராஜரை நிராகரித்தனர். அப்பவும் காமராஜர் திருந்தவில்லை. "கு. காமராஜ நாடார்" என்ற சாதிப்பெயரோடு நாகர்கோவில் இடைத் தேர்தலில் போட்டியிட்டு, "நாடார் சாதி" ஆதரவோடுதான் அரசியலில் நீடிக்க முடிந்தது. "கூத்தாடிகளின் கூட்டம்" என்று திராவிடக் கட்சிகளைக் கேலிசெய்த காமராஜர் கடைசியில் சிவாஜி - பத்மினியை வைத்து ஓட்டுப் பொறுக்க முயன்றும் தோற்றுப் போனார்.

"பதவிகளை நாடாத பண்பாளர், ஆட்சியாளர்களை உருவாக்குபவர்" என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. நாடு முழுவதும் காங்கிரசு செல்வாக்கிழந்து

படிப்பகம்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

www.padippakam.com

# இரட்டை வேடதாரிகளின் ஐக்கிய முன்னணி

ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திலேயே பெட்ரோல் - டீசல் விலைகளை உயர்த்தியதும், ஐ.மு. அரசில் உள்துறை அமைச்சராக உள்ள வலது கம்யூனிஸ்டுத் தலைவரான இந்திரஜித் குப்தா, ஒரு கொள்கை விளக்கம் அளித்தார். "அமைச்சர் என்ற முறையில் விலையேற்றத்தை ஆதரிக்கிறேன்; கட்சியின் தலைவர் என்ற முறையில் நான் அதை எதிர்க்கிறேன்!"

இது என்ன கொள்கை என்று மக்கள் குழம்பிக் கொண்டிருக்கும் போது, மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சரான தி.மு.க.வின் டி.ஆர். பாலு, "பெட்ரோல் - டீசல் விலைகளைக் குறைப்பது பற்றி எந்தப் பரிசீலனையும் கிடையாது. பெட்ரோலியத் துறை ஒரு வியாபார நிறுவனம். அதை நட்டத்தில் இயங்க அனுமதிக்க முடியாது. பெட்ரோல் விலை உயர்வைப் பொருத்தவரை நான் முதலில் பிரதமர் தேவ கௌடாவைத் தான் ஆதரிப்பேன்; பிறகு தான் கட்சியெல்லாம்" என்று பேட்டியளித்தார். ஆனால் தி.மு.க. தலைவர் கருணாநிதியோ, அந்த நேரத்தில் பெட்ரோல் - டீசல் விலைகளைக் குறைக்கக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

இதேபோல, ராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாக தி.மு.க. தனது திருச்சி மாநாட்டில் தீர்மானமே கொண்டு வந்தது. ஆனால் ஐ.மு. உள்ள தி.மு.க.வின் முரசொலி மாறன் தொழிலமைச்சரானதும் ராவ் அரசின் கொள்கைகளை ஆதரித்து, தாராளமயத்தையும் அந்நிய முதலீடுகளையும் பெருக்குவோம் என்கிறார்.

"இது என்ன பித்தலாட்டம்? தேர்தலுக்கு முன் ஒரு கொள்கை; பதவிக்கு வந்த பின் ஒரு கொள்கையா?" என்று நாட்டு மக்கள் வெறுப்புடன் கேட்கலாம். அதனால்தான் வலது கம்யூனிஸ்டு இந்திரஜித் குப்தா பொருத்தமானதொரு புதிய 'தத்துவத்தை' உதிர்த்துள்ளார். நாளை, "மாநிலத்தில் எதிர்ப்போம்; மத்தியிலே ஆதரிப்போம்!" "இந்தியன் என்ற முறையில் ஆதரிப்போம்; தமிழன் என்ற முறையில் எதிர்ப்போம்!" "ஆட்சியில் இருப்பதால் எதிர்க்கிறோம்; குடிமகன் என்ற முறையில் ஆதரிக்கிறோம்!" என்று புதிய வியாக்கியானங்களுடன் இப்பித்தலாட்டங்கள் வளர வாய்ப்புகள் நிறையவே உள்ளது.


இப்படி நீதி-நேர்மை, கொள்கை - லட்சியம் என்று எதையும் பார்க்கத் தேவையில்லை; பணம் - பதவியைக் குறிவைத்து அரசியல் நடத்துவதில் தவறில்லை என்கிற ஒரு புதிய பாரம்பரியம் - பண்பாட்டை தற்போதைய ஆட்சியாளர்கள் திட்டமிட்டே வளர்த்து வளருகிறார்கள். இந்த அயோக்கியத்தனத்தைப் போலிக் கம்யூனிஸ்டுகள் வெட்கமின்றி ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தக் கொள்கையை எதிர்த்து வீரவசனம் பேசினாரோ, அதே தாராளமயக் கொள்கையை ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களிலேயே நடைமுறைப் படுத்தக் கிளம்பியவர் அன்று கர்நாடக முதல்வராக இருந்த தேவகௌடா. விவசாய விளைநிலங்களைக்கூட ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்க்கும் புதிய நிலச்சீர்திருத்தக் கொள்கையைக் கொண்டு வந்தவர். விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் ஏகாதிபத்திய நச்சு ஆலைகளை கர்நாடகத்தில் நிறுவ அனுமதி அளித்து ஏகாதிபத்திய சேவையில் காங்கிரசுக்கே முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

இத்தகைய அயோக்கிய சிகாமணிதான் இன்று பிரதமராகியுள்ளார். இவரைத்தான் மண்ணின் மைந்தர், எளிமையான விவசாயி என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் ஏற்றிப் போற்றுகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு - புதிய பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பு சவடால் அடித்த போலிக் கம்யூனிஸ்டுகளும் தி.மு.க.வும் இவரைப் பிரதமராக்கவதற்குத்தான் பேரங்கள் - பேச்சு வார்த்தைகள் நடத்தின.

இதேபோல, முன்பு காங்கிரசு அரசில் வர்த்தக அமைச்சராக இருந்து நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு மறுகாலனியாக்கி வந்தவர்தான் ப. சிதம்பரம். நாட்டை விற்ற இத்துரோகிதான் இன்று ஐ.மு. அரசின் நிதியமைச்சர். பதவிக்கு வந்ததுமே காங்கிரசின் தாராளமயக் கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று வெளிப்படையாகவே அறிவித்தார்.

இப்படி கடைந்தெடுத்த ஏகாதிபத்திய தாசர்களைப் பதவியில் அமர்த்துவது சரிதான் என்றால் தி.மு.க., ஜனதா தளம் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கொள்கைகள் தான்




படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கிய முன்னணியின் கிரிமினல் பின்னணி

தேர்தலுக்கு முன்பு, "அரசியல் கிரிமினல்களின் ஆதிக்கத்தை ஒழிப்போம்" என்று வாய்கிழியப் பேசிய ஐக்கிய முன்னணிக் கட்சிகள், தேர்தலில் வெற்றி பெற்றதும் கடைந்தெடுத்த ஊழல் - கிரிமினல் மோசடிப் பேர்வழிகளையே அமைச்சர்களாக்கியுள்ளனர்.

• ஐ.மு. அரசில் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவின் சிபாரிசின் படி, பீகாரைச் சேர்ந்த தஸ்லிமுதீன் அமைச்சராக்கப்பட்டார். ஆனால் தஸ்லிமுதீன் கொட்டை போட்ட கிரிமினல் பேர்வழி என்று ஏற்கனவே அம்பலமாகியுள்ளதால் போலிக் கம்யூனிஸ்டுகள் அவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரினர். ஐ.மு. அரசை ஆதரிக்கும் இக்கட்சிகளின் நிர்பந்தம் காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து தஸ்லிமுதீன் நீக்கப்பட்டுள்ளார். ஆனால் ஐ.மு. அரசின் பெரும்பாலான அமைச்சர்கள் தஸ்லிமுதீனின் அண்ணன்களாகவே உள்ளனர்.

• ஜவுளித்துறை அமைச்சராகியுள்ள ஜாலப்பா மீது ஏற்கனவே கர்நாடகத்தில் கொலை வழக்குகள் உள்ளன.

• தகவல் - ஒலிபரப்புத்துறை அமைச்சரான இப்ராஹிம் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன.

• கால்நடைத் துறை இணை அமைச்சரான திலிப்ரே வீட்டில் ஏற்கனவே அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

• வர்த்தகத் துறை இணை அமைச்சரான பொல்லிபுல்லா ராமையா, 1982-இல் உணவில் கலப்படம் செய்து கைதானவர். இதுதவிர அந்நியச் செலாவணி கடத்தல் தடைச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டவர்.

• நிலக்கரித் துறை அமைச்சராக உள்ள காந்திசிங், பீகார் நிலக்கரி மாஃபியா கும்பலின் ஆதரவுடன் லல்லுபிரசாத் யாதவின் சிபாரிசின்படி அமைச்சராக்கப்பட்டுள்ளார்.

• பாராளுமன்ற விவகார அமைச்சராகியுள்ள ஒரிசாவைச் சேர்ந்த சொரூப் ஜனா மீது பொருளாதார மோசடிக் கிரிமினல் வழக்குகள் உள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக

• நிதியமைச்சராகியுள்ள ப. சிதம்பரம், பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்ட "ஃபேர்குரோத்" நிறுவனத்தின் கூட்டாளி.

• மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரான எஸ்.ஆர். பொம்மை ஹவாலா ஊழலில் சிக்கியவர்.

• பாதுகாப்புத் துறை அமைச்சரான முலாயம்சிங் யாதவ், உத்திரப்பிரதேச கிரிமினல் - மாஃபியாக்களின் கூட்டாளி என்பது நாடறிந்த உண்மை. இவர் உ.பி. முதல்வராக இருந்த போது, கூட்டணிக் கட்சியான பகுஜன் சமாஜ் கட்சி உறவை முறித்துக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்த நேரத்தில், அக்கட்சியின் எம்.எல்.ஏக்கள் மற்றும் உள்ளூர் தலைவர்கள் மீது தனது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்தினார். இது பற்றிய விசாரணை அறிக்கையைக் காட்டி, முலயம் சிங்கை பதவியிலிருந்து நீக்குமாறு எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கோரி வருகிறது.

ஐ.மு. அரசை ஆதரிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளோ, இந்த விசாரணை அறிக்கை மோசடியானது; ஒரு தலைப்பட்சமானது என்று சாடி, முலயம் சிங்குக்கு முட்டுக் கொடுத்துப் பகிரங்கமாக அறிக்கை விடுகிறார்கள். மத்தியிலே கிரிமினல் பின்னணி கொண்ட ஐ.மு. அரசுக்கு ஆதரவு; மே. வங்கத்திலே, கிரிமினல் - மாஃபியா கும்பலின் தலைவரான ரஷீத்கானுடன் கூட்டு எனப் போலிகளின் 'புரட்சி' நாலு கால் பாய்ச்சலில் கிளம்பி விட்டது நல்ல முன்னேற்றம்தான்.

என்ன? இது ஒரு புறம் இருக்கட்டும். மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் ராவ் காங்கிரசுக்கும் என்ன தான் கொள்கை வேறுபாடு இருக்கிறது. ஜெயாவுடன் கூட்டணி சேருவதை எதிர்த்ததைத் தவிர, வேறு எந்த விவகாரங்களில் அது ராவ் காங்கிரசிடமிருந்து மாறுபட்டுள்ளது? எதுவும் கிடையாது. ஆனாலும் மூப்பனார் கட்சியைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டு முற்போக்கு நாடகமாடுகிறார்கள். மூப்பனார் கட்சியைச் சேர்ந்த ப. சிதம்பரம் தயாரித்த பட்ஜெட்டை ஐ.மு. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமின்றி காங்கிரசும் போலிக் கம்யூனிஸ்டுகளும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்கள்.




ப. சிதம்பரத்தின் பட்ஜெட்டுக்கு 15 நாட்களுக்கு முன்பாக, 1995- 96-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையை ஐ.மு. அரசு வெளியிட்டது. இந்த அறிக்கையானது, எவ்வித நிபந்தனையுமின்றி முந்தைய ராவ் அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு வக்காலத்து வாங்குகிறது; ராவ் அரசின் நடைமுறையைத் தான் இது விரைவுபடுத்துகிறது என்று மார்க்சிஸ்டுகள் குற்றம் சாட்டினர். ஆனாலும் அதே கொள்கையின் படி, தாடியும் தலைப்பாகையுமில்லாத மன்மோகன் சிங்காகிய ப. சிதம்பரம் பன்னாட்டு நிறுவனங்களின் பகற் கொள்ளைக்கு வரலாறு காணாத சலுகைகளை பட்ஜெட்டில் அறிவித்துள்ளார். அந்நியப் பொருட்களின் இறக்குமதிக்கான தீர்வை குறைப்பு, சுங்கத் தீர்வை குறைப்பு, அந்நிய முதலீட்டுக்குத் தாராள வசதிகள் என வாரியிறைத்துள்ளார். விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக


படிப்பகம்

www.padippakam.com



அலங்காரச் சொல்லடுக்குகள் உள்ளனவே தவிர, விவசாயத்துக்கோ, சமூக நலனுக்கோ வேலையின்மையைப் போக்கவோ உருப்படியாக எந்தத் திட்டமும் இந்த பட்ஜெட்டில் இல்லை.

இத்தனைக்கும் பிறகும்கூட, இனிப்பான பட்ஜெட் என்கிறார் பிரதமர் கௌடா. சிறந்த பட்ஜெட் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவரான நரசிம்ம ராவ். போலிக் கம்யூனிஸ்டுகளோ ''ஏழை - எளியோரை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட மிக நல்ல பட்ஜெட்'' என்று சான்றிதழ் கொடுக்கின்றனர். நாட்டை மறு அடகு வைக்கும் நோக்கத்துடன் கடந்த ஆண்டுகளில் மன்மோகன் சிங் தயாரித்த பட்ஜெட்டுக்கும், அவரது சீடர் சிதம்பரம் தயாரித்துள்ள பட்ஜெட்டுக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது. எதிர்கட்சிகளாக இருக்கும் போது மன்மோகன் சிங்கின் கொள்கைகளை எதிர்த்த இக்கட்சிகள், இன்று ஆளுங்கட்சிகளாக மாறியதும் அதே கொள்கைகளை ஆதரிக்கின்றன



மக்களை முட்டாளக்கிய மகிழ்ச்சிக் களிப்பில் வலது கம்யூ. அமைச்சர் சதுரனன் மிஸ்ராவும் பா.ஜ. எம்.பி. சுஷ்மா சுவராஜும்.

என்றால், எந்தக் கொள்கையை எதிர்த்து தேர்தலுக்கு முன்புவரை சவடால் அடித்து வந்தார்களோ, இன்று அதே கொள்கையை ஏற்றுக் கொண்ட பிறகு, இக்கட்சிகளின் கொள்கை - லட்சியம் எல்லாம் காலிப் பெருங்காய டப்பாவாகி விட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிர்ப்பு என்பது பல் பிடுங்கப்பட்ட பாம்பாகிவிட்டது.

இத்தகைய நயவஞ்சக மோசடியை எல்லா அரங்கிலும் தீவிரப்படுத்தி இந்த ஆட்சியாளர்கள் புதிய பாரம்பரியத்தை உருவாக்கி வருகிறார்கள். வி.பி. சிங்குக்கு செயிண்ட் குட்டீஸ் தீவிலுள்ள வங்கியில் இரகசியக் கணக்கு உள்ளது என்று பொய்யான ஆதாரங்களைத் தயாரித்த நரசிம்மராவுடன் கூட்டுச் சேர்ந்து ''போர்ஜரி'' வேலைகளில் ஈடுபட்டவர் ரமேஷ் பண்டாரி. காங்கிரசு கவர்னரான இவர் வடகிழக்கு மாநிலங்களில் ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி காங்கிரசின் சகுனியாகச் செயல்பட்டவர். நேற்று வரை காங்கிரசின் கைக்கூலி என்ற யாரைச் சாடினார்களோ அதே ரமேஷ் பண்டாரியைத்தான் ஐ.மு. ஆட்சியாளர்கள் உ.பி. மாநில ஆளுநராக நியமித்துள்ளனர்.

ஐக்கிய முன்னணி கூட்டணிக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலின் பொழுது, ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிட்டவர்கள்; எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளார்கள். மேலும் காங்கிரசின் கேடு கெட்ட கொள்கையையே விசுவாசத்தோடும் தீவிரத்தோடும் நடைமுறைப்படுத்தும் நயவஞ்சக மோசடிப் பேர்வழிகளாகியும் விட்டார்கள். திருடன் கையில் பெட்டிச் சாவியைத் தருவதே புத்திசாலித்தனம்; பாலியல் வன்முறையை ஏவியவனுக்கே மணம் முடித்து வைப்பதுதான் மானத்தைக் காக்கும் வழி என்று நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் கடைகோடி கழிசடைத்தனத்தில் இறங்கி விட்டதையே இது நிரூபிக்கிறது. • குமார்

வந்த நிலையில், இந்தியா - சீனப்போரில் தோல்வி கண்டதையடுத்து நேருவின் கவர்ச்சி வெளுத்துப் போன நிலையில், நேருவின் வாரிசு இந்திராவிற்குப் பதவியை உறுதி செய்வதற்காக மாநிலத் தலைவர்களை ஓரங்கட்டுவதற்கு நேரு - காமராஜ் செய்த சதிதான் மூத்த தலைவர்களைக் கட்சிப் பணிக்கு அனுப்புவது என்ற ''காமராஜ் திட்டம்'' வந்தது. இந்திரா தனது கைப்பாவையாக இருப்பார் என்ற காமராஜரின் கணக்கு தவறாகிப் போகவே, சஞ்சீவ ரெட்டி, மொரார்ஜி, நிஜலிங்கப்பா, சி.பி.குப்தா, அதுல்யா கோஷ், எஸ்.கே.பாடீல் ஆகிய சிண்டிக்கேடர்களுடன் கூட்டுச் சேர்ந்தார். மாநிலத்தில் திமுகவையும் மத்தியில் இந்திராவையும் எதிர்த்து நிற்கும் திராணியற்ற காலாவதியான அரசியல் நடத்திக் கொண்டிருந்தார். ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் இந்திராவின் அவசர நிலை ஆட்சி எதிர்ப்பு அலை ஓங்கிய போது கூட செயலற்ற நிலையிலேயே இருந்து மாண்டு போனார்.

இப்போது அதே பெரும் முதலாளிகள், பெரும் வியாபாரிகள், பெரும் பண்ணையார்கள் கூட்டம் காமராஜரின் வாரிசாக மூப்பனாரையும் ரஜினியையும் முன்னிறுத்தி ஆட்சியைப் பிடிக்க எத்தணிக்கின்றது. தமிழ்நாட்டுப் பார்ப்பனப் பத்திரிக்கைகளோ, காமராஜரோடு இந்தி வெறியரும், குலக்கல்வி நாயகரும், கட்சி மாறிகளின் ஆட்சி அமைத்தவரும், அமெரிக்கத் தாசருமான இராஜாஜியையும் சேர்த்து காமராஜர் - ராஜாஜி துதிபாடி மூப்பனாரை ஆட்சிக்குக் கொண்டு வரப் பிரச்சாரம் செய்கின்றன. காங்கிரசு - பார்ப்பன கும்பலால் முன்னிறுத்தப்படும் மூப்பனாரின் கொள்கை - இலட்சியங்களில் மக்களால் நிராகரிக்கப்படாதவை உண்டா? இல்லை; அவர்கள் பீற்றிக் கொள்வது போல, மூப்பனாருக்கு நேர்மை - திறமை உண்டென்று காட்டுவதற்கு ஏதாவது ஆதாரம் அடிப்படை உண்டா? எதுவுமில்லை. அவசர நிலை ஆட்சிக் காலத்திலேயே காமராஜரின் கட்சியை இந்திராவிடம் விலைபேசி விற்றவர்; அதன்பிறகு வந்த இந்திரா - சஞ்சய் - ராஜீவ் என்ற நேரு பரம்பரைக்கும் நரசிம்மராவுக்கும் விசுவாசியாக இருந்து அவர்களுடைய இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், அக்கிரமங்கள் எல்லாவற்றையும் ஆதரித்தவர். இந்தித் திணிப்பு, காவிரி நீர்ப்பிரச்சினை, ஈழத்தமிழர் பிரச்சினை உட்பட எந்த விவகாரத்திலும் தமிழக நலனுக்காகக் குரல் கொடுத்தவரில்லை. உண்மைதான்! மூப்பனார் கட்சி ஒரு வேளை தேர்தலில் வென்றால் அது காமராஜர் ஆட்சியாகத்தான் இருக்கும்; ஆனால் அது நிச்சயம் தமிழர் நலனுக்கானதாக இருக்காது!



படிப்பகம்

www.padippakam.com

# மயானமாகிறது ஈராக்

ஈராக் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இராணுவ ரீதியாகப் பலமிழந்தும் பொருளாதார ரீதியாகச் சின்னா பின்னமாகியும் விட்டது அந்நாடு. ஆனாலும், "ஈராக் வசம் இன்னும் இரசாயன ஆயுதங்கள் உள்ளன" என்ற கதைக்குதவாதக் காரணத்தைக் கூறி, தடையுத்தரவு தொடர வேண்டும் என முரண்டு பிடித்து வருகின்றன அமெரிக்காவும் இங்கிலாந்தும். இதனிடையே சர்வதேச நிர்பந்தம் காரணமாக, உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் வாங்குவதற்காக 8000 கோடி ரூபாய் பெறுமான கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்து விற்க ஈராக்கிற்கு அனுமதி அளித்துள்ளது, ஐ.நா. சபை.

சதாம் உசேனைப் பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட இந்தத் தடையுத்தரவு ஈராக்கியர்களின் உயிரைக் குடிக்கும் எமனாக மாறிவிட்டது. அந்நாட்டில் கடந்த ஐந்து வருடங்களில் ஐந்து வயதிற்கும் கீழான ஐந்து லட்சம் குழந்தைகள் அமைதியான முறையில் மாண்டு போயினர்; 15 லட்சம் குழந்தைகள் சாகும் தருவாயில் உயிருக்குப் போராடுகின்றன. சத்தான உணவின்மையும் வயிற்றுப் போக்கு நோயும்தான் ஈராக் மயானமாகி வருவதற்குக் காரணங்கள்.

போரின் பொழுது அமெரிக்கப் படைகள் திட்டமிட்டே ஈராக்கின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அழித்துவிட்டதால், அந்நாட்டின் நதிகள் யாவும் சாக்கடை நீர் கலந்தே ஓடுகின்றன. ஆற்றுநீரைக் குடிநீராகச் சுத்திகரிக்கத் தேவையான குளோரினை, தடையுத்தரவின் காரணமாக ஈராக் இறக்குமதி செய்து கொள்ள முடியாது. இதனால் சுகாதாரமற்ற நீரைக் குடித்து, ஈராக்கிய மழலைகள் வயிற்றுப் போக்கு கண்டு இறந்து போகின்றன.

இச்சாதாரண வயிற்றுப் போக்கு நோயைக் குணமாக்கும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்குக் கூட ஏகாதிபத்தியங்கள் தடை விதித்து உள்ளன. இன்று ஈராக்கின் பெரும்பாலான மருத்துவமனைகளில் மாற்று படுக்கை விரிப்புகள் கூட போதுமான அளவு கிடையாது. பின் மருத்துவ சாதனங்களைப் பற்றி பேச வேண்டிய தேவையில்லை. நோயாளிகளின் அவசர உதவிக்குத் தேவைப்படும் "ஆம்புலன்ஸ்" வண்டிகள் அனைத்தும் உதிரி பாகங்கள் இல்லாததால் துருப்பிடித்து நிற்கின்றன. பென்சில்கள், பாட நூல்கள், நோட்டுகள் இறக்குமதிக்கும் தடைவிதித்து, ஈராக்கின் வருங்கால சந்ததியினரைத் தற்குறிகளாக்கும் சதித்தனத்திலும் ஈடுபட்டு வருகின்றன, மேற்குலக ஏகாதிபத்தியங்கள்.

ஈராக்கில் மாதமொன்றிற்கு 3000 முதல் 4000 தினார்கள் (கிட்டத்தட்ட 280 ரூபாய்) வரை சம்பாதிக்கும் திறன் கொண்ட மருத்துவர்கள், உயர் அதிகாரிகளின் குடும்பங்கள் கூட, அன்றாடம் அரைகுறைப் பட்டினியாய்தான் காலந்தள்ளுகின்றன. இச்சம்பளத்தைக் கொண்டு மாதமொன்றுக்கு 60 முட்டைகள் கூட வாங்கிவிட முடியாது. இந்நிலையில் 500 தினார்கள் மட்டுமே கூலி பெறும் தொழிலாளர்களுக்கு வயிற்றுப்பாடே பெரும்பாடுதான்.

இப்படி பிடித்தாட்டும் வறுமையைச் சமாளிக்க, போருக்கு முன்பு வளமாக இருந்த பொழுது வீட்டில் சேமித்து வைத்திருந்த பண்ட பாத்திரங்கள், நகைகள், துணிமணிகளை தெருவில் கடைவிரித்து விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் ஈராக்கிய மக்கள். ஈராக்கின் வடபகுதியில் வாழும் பெரும்பாலோரின் வீடுகளில் சன்னல்களும் கதவுகளும் நிலைகளும் பெயர்த்து எடுக்கப்பட்டு தெருவோர விற்பனைக்கு வந்துவிட்டன. செருப்புக்கு மெருகு போடுவது, சிகரெட்டுகள் விற்பது எனக் கிடைக்கும் வேலையில் ஒட்டிக் கொள்ள தெருதெருவாய் சுற்றி வருகிறார்கள் ஈராக்கிய சிறுவர்கள். விபச்சாரமும் பிச்சையெடுப்பதும் நாகரீகத்தின் தொட்டில் எனக் கருதப்படும் அந்நாட்டில் இன்று அவமானம் தரத்தக்கதல்ல.

ஈராக்கின் இந்த அவலமான நிலையிலும் "மாட்டை இரண்டு முறை தோலுரிப்பது" என்ற தங்களின் ஈன புத்தியை ஏகாதிபத்தியங்கள் கைவிட்டு விடவில்லை. "ஈராக்கின் எண்ணெய் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணம் அனைத்தும் ஐ.நா. வங்கிக் கணக்கில்தான் போடப்படும். மேலும், இத்தொகையில் இருந்து குவைத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்காக 1200 கோடி ரூபாயும்; ஏகாதிபத்தியங்களின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் வடக்குப் பகுதியில் வாழும் குர்த் இன மக்களின் பராமரிப்பு எனும் பெயரில் 600 கோடி ரூபாயும்; ஈராக்கில் 'இரசாயன ஆயுதங்கள் உள்ளனவா?' எனக் கண்காணித்து வரும் ஐ.நா. குழுவின் நடவடிக்கைகளுக்காக 400 கோடி ரூபாயும் ஐ.நா. சபையால் எடுத்துக் கொள்ளப்படும்" என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தான் இவ்விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் அரைகுறை சுதந்திரத்தைக்கூடப் பறித்து விட முயலும் சதித்தனம் நிறைந்தவைதான் இந்த நிபந்தனைகள்; பொருளாதாரத் தடையுத்தரவைத் தொடர்வதன் மூலம் தனது மேலாதிக்கத்தை எதிர்க்கத் துணிந்த ஈராக்கிற்கு பாடம் புகட்டுவது மட்டும் அமெரிக்காவின் நோக்கமன்று. இன்றும் தன்னை எதிர்த்து வரும் கியூபா, வடகொரியா, லிபியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு அமெரிக்கா விடும் மறைமுக மிரட்டலுமாகும் இது.

• செல்வம்

**மரணத்தை எதிர்நோக்கும் ஈராக்கிய மழலை**





படிப்பகம்

www.padippakam.com



### கொலைகார 'காவலர்கள்'

ஐந்து மத்திய சேமப்படைக் காவலர்கள் கோவை செல்ல சேரன் விரைவுத் தொடர் வண்டியில் பதிவு செய்யப்படாத பெட்டியில் ஏறியுள்ளனர். அங்கு இடம் பிடிப்பதில் ஏற்பட்ட தகராறில் C. ராஜு என்ற 36 வயது பயணியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டனர். இதில் மூன்று காவலர்கள் தப்பி ஓடிவிட்டனர். சிக்கிய இருவரை மக்கள் பிடித்து காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

### பாலின்றிக் குழந்தைகள் சாவு

1995 - 96 ஆம் ஆண்டில் இந்தியா 7 கோடி டன்னுக்கும் (7000 கோடி கிலோ) மேலாக பால் உற்பத்தி செய்து உலகிலேயே முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

1996-ம் ஆண்டு உலக நாடுகள் அறிக்கையின் படி உலகிலுள்ள ஊட்டச்சத்து குறைந்த குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் இந்தியாவிலுள்ளன. ஐந்து வயதுக்குட்பட்ட, ஊட்டச் சத்து குறைவினால் இறக்கும் குழந்தைகள் இந்தியாவில்தான் மிக அதிகம். ஏழரைக் கோடி குழந்தைகள் (இந்தியக் குழந்தைகள் எண்ணிக்கையில் இது 63 சதம்) ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### செலவைக் குறை! ஊருக்கு உபதேசம்

நமது பிரதமர் தேவகவுடாவின் உடல் நலத்தை கவனிக்க உயர் கல்வி கற்று, சிறப்பு தேர்வு பெற்ற 50 மருத்துவர்கள் எப்போதும் அவருடன் உள்ளனர். டில்லியிலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்திலிருந்து அதிகமான மருத்துவர்களை பிரதமருக்கு கொடுத்து விட்டனர். பொது மக்களின் நலன் கவனிக்க எதற்கு மருத்துவர் என முடிவு செய்துவிட்டனரோ?

### மனித மிருகங்கள் - சித்திரவதையில் புதுமை

அடித்து சித்திரவதை செய்தால் தழும்பு ஏற்படுகிறது. இதனால் மனித உரிமைக் கழகங்களின் கண்டனங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்க மனிதத் தன்மையற்ற ஆளும் வர்க்கங்கள் புதிய சித்திரவதைக் கொடுமைகளை உருவாக்குகின்றனர். சித்திரவதைத் தடையங்களை எளிதாகக் காண முடியாது.

ஒரு மனிதனை இறுக்கமான கண்ணாடி கூண்டிலடைத்துக் கொடும் வெயிலில் நிறுத்துவது. உடம்பிலுள்ள நீர் முழுதும் வியர்வையாக வெளியேறி, உடம்பில் நீர்ச்சத்தே இல்லாமற் போகும். அடுத்தது சாவுதான். இதற்கு 'மணி' என்று பெயர்.

சிறிய குறுகலான உறை நிலைக்கும் கீழான குளிருள்ள அறையில் பல நாட்கள் பூட்டி வைப்பது. இதற்கு 'குளிர்சாதனப் பெட்டி' எனப் பெயர். மென்மையான தொண்டையின் உட்பகுதியில் மின்சாரத்தைப் பாய்ச்சுவது என புதுப்புது வதைகளை உருவாக்குகின்றன மனித மிருகங்கள். எல்லா நாடுகளுக்கும் இவை உடனே பொதுவாக்கப்படுகிறது.

### சி.பி.எம். ஆட்சியின் யோக்கியதை

கல்கத்தா போக்குவரத்து போலீஸ் சார்ஜண்ட் கோஷ் என்பவன் குடித்து விட்டு மத்திய கல்கத்தாவில் நடைபாதையில் வசிக்கும் 25 வயது பெண்ணை மிரட்டி தனது வண்டியில் அழைத்துச் சென்றான். ஒதுக்குப்புறமாயுள்ள ஒரு திடலில் வைத்து பாலியல் பலாத்காரப் படுத்தினான். அப்பெண்ணின் கணவர் வண்டியின் எண்ணைக் குறித்து வைத்து, புகார் செய்தார். இது நடந்தது ஜூன் 29 இரவில். முதலில் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண் குடும்பத்தினரும் நண்பர்களும் சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்த பின்பே சி.பி.எம். அரசு அந்த போலீசைக் கைது செய்தது.

### காட்டுமிராண்டி சட்டம்

குவைத் நாட்டில் வசிப்பவர் ராபர்ட் ஹுசைன். வயது 44. இவர் முஸ்லிம் மதத்திலிருந்து கிறித்தவ மதத்திற்கு மாறினார். குவைத் இஸ்லாமிய நீதிமன்றம் ஹுசைனை சமயப் பகைவன் என அறிவித்து ஜூன் 9-ல் மரணதண்டனை விதித்தது. வழக்கறிஞர்களும் சரியான தீர்ப்பு என்றனர். இதற்கு மக்களிடமிருந்து கடும் கண்டனம் வரவே செப்டம்பரில் சிவில் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார். இஸ்லாமிய சட்டப்படி மதம் மாறியவர் சமய விரோதி; பேச உரிமையில்லை; சட்டப்படி மனைவி மணவிலக்கு பெற்றவராகி விடுவார்; குழந்தைகளைக் கூட பார்க்க முடியாது; அவரது அடிப்படை உரிமைகள் பறி போய் விடும்.

### ஒரிசா மாநிலத்தில் பெண்களின் அவலம்

ஒரிசா மாநிலத்தில் பெண்கள் மீதான வன்முறைகள் பெருகி வருகின்றன. இன்று சராசரியாக இரு நாட்களில் மூன்று பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு பெண் வரதட்சணைக்காக கொல்லப்படுகிறாள். பெண்கள் மீதான சித்திரவதைக் கொடுமைகள் நாளொன்றுக்கு மூன்று என அபாயகரமாக அதிகரித்து வருகிறது.

இக்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வக்கற்ற மாநில அரசாங்கம், பெண்கள் வேலைக்கு என வெளியே வருவதால் தான் இந்த நிலை என வெள்ளை அறிக்கை தந்து மக்களின் எதிர்ப்பையும் கோபத்தையும் சம்பாதித்துள்ளது.

### அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு சாவுமணி!

ஈராக்குக்கு எதிரான போரின் போது அரபு நாடுகளுக்கு உதவி என்ற பெயரில் அமெரிக்கா பெருமளவில் தனது படைகளை சவுதி அரேபியாவில் குவித்தது. போர் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் படைகளை முழுமையாக திரும்பப் பெறவில்லை. இன்றைக்கும் 6000-க்கும் மேற்பட்ட அமெரிக்க படைவீரர்கள் சவுதியில் தங்கியுள்ளனர். அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, ஆபாச சீரழிவுகளுக்கு சாவுமணி அடிப்பதைப் போல அமெரிக்கப் படையினர் தங்கியிருந்த கட்டிடத்தை ஜூன் 25 இரவு வெடிகுண்டால் தகர்த்தனர் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள். 19 பேர் இறந்ததாகவும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்ததாகவும் அரசுத்தரப்பு செய்தி கூறுகிறது.

* * * * * *

குண்டுவெடிப்பால் நொறுங்கிய அமெரிக்கப் படையினர் தங்கியிருந்த கட்டிடம்





படிப்பகம்

## ஒலிம்பிக்: கறுப்பின மக்களுக்கு எதிராக அமெரிக்காவின் நிறவெறியாட்டம்

அமெரிக்காவின் ஜியார்ஜியா மாநிலம் அட்லாண்டா நகரில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியையொட்டி, அந்நகரில் தெருக்களில் வாழும் வீடற்ற கறுப்பின மக்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். அட்லாண்டா நகரை சொமான்களின் சொர்க்கபுரியாகக் காட்டும் நோக்கத்தோடு, தெருக்களிலும், பூங்காக்களிலும் வசிக்கும் வீடற்ற மக்களும் பிச்சைக்காரர்களும் போலீசாரால் கண்மூடித்தனமாக மாநிலத்தை விட்டே விரட்டப்பட்டுள்ளனர். சொந்தமான கார் இல்லாத எவரும் பூங்காக்களில் நுழையக் கூடாதென தடையுத்தரவு போடப்பட்டுள்ளது.

இதுதவிர, ஆண்டுக் கணக்காய் உள்ள ஏழைகள், வாடகைக்குக் குடியிருந்த வீடுகளிலிருந்து அவற்றின் உரிமையாளர்களால் கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ஒலிம்பிக் விளையாட்டு நடைபெறும் காலத்தில் சுற்றுலாப் பயணிகளைத் தங்க வைத்து கூடுதலான வாடகை பெறும் நோக்கத்தோடு இவ்வாறு குடியிருப்போரை வெளியேற்றினர். மேலும், நூற்றுக்கணக்கான கறுப்பின இளைஞர்கள் போதை மருந்து கடத்தியதாக பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப்பட்டுள்ளனர். இந்த அநியாயத்துக்கெதிராக கறுப்பின மக்கள் போராடவும் முடியாது. ஏனெனில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியையொட்டி அட்லாண்டா போலீசாருக்கு வரம்பற்ற அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. போராடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால் கூட விசாரணை ஏதும் கிடையாது.

இத்தகைய நிறவெறியையும் ஏகாதிபத்திய வெறியையும் ஏழை நாடுகள் மீதும் அமெரிக்கா கக்குகிறது. கடந்த ஆண்டு சோமாலியா நாட்டின் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிக்கு பயிற்சி பெறுவதற்காக, அமெரிக்காவுக்கு வருவதற்கான அழைப்பை அது ரத்து செய்துள்ளது. ஏனெனில் ஈராண்டுகளுக்கு முன்பு அமெரிக்க 'அமைதிப்படை' வீரர்களை சோமாலிய மக்கள் சுட்டுக் கொன்று தெருக்களில் நாய்களைப் போல 'இழுத்துச் சென்று' அவமானப்படுத்தினர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் 'சோமாலிய விளையாட்டு வீரர்களின் பயிற்சிக்கான அனுமதி மறுக்கப்பட்டது. இந்த உண்மைகளை அமெரிக்காவிலுள்ள மனித உரிமை அமைப்புகள் அம்பலப்படுத்தி பகிரங்கமாகச் சாடியுள்ளன.

இதுதவிர, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருக்கும் போதே, பார்வையாளர்கள் தங்குவதற்கென உருவாக்கப்பட்ட குடியிருப்பில் கடந்த ஜூலை 27 அன்று குண்டு வெடித்ததில் 2 பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இக்கொடுஞ்செயலை அமெரிக்காவிலுள்ள "கூகிளக்ஸ்கிளான்" என்ற வெள்ளை இனவெறி பயங்கரவாத அமைப்பு நடத்தியுள்ளது. "ஒலிம்பிக் விளையாட்டுகள் நேர்மையையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஊக்குவிக்கும்" என்று முழங்கும் அமெரிக்காவின் கோர முகத்தை அட்லாண்டாவில் தொடரும் இனவெறி அட்டூழியங்கள் திரைகிழித்துக் காட்டுகின்றன.

## கொலைகார போலீசுக்கு எதிராகச் சளையாது போராடிய வீராங்கனை

அது 1974-ம் ஆண்டு. நக்சல்பாரி புரட்சித் தீ நாடெங்கும் பற்றிப் பரவிய காலம் அது. கல்கத்தாவில், சௌமன் குகா என்பவர் அப்போது நக்சல்பாரி புரட்சியாளராக இருந்தார். தலைமறைவாக இருந்த அவரைப் பிடிக்கும் நோக்கத்தோடு, அவரது சகோதரியான அர்ச்சனாவையும் அவருடன் தங்கியிருந்த அவரது மைத்துனி லத்திகா மற்றும் குடும்ப நண்பர் கௌரி ஆகியோரையும் 1974 ஜூலை 17-ம் நாளன்று போலீசார் கைது செய்து இழுத்துச் சென்றனர். கல்கத்தாவின் டம்டம் பகுதியிலிருந்த அர்ச்சனாவின் வீடு சூறையாடப்பட்டது. பள்ளித் தலைமை ஆசிரியையான அர்ச்சனாவையும் மற்ற இரு பெண்களையும் நக்சலைட்டு தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி கல்கத்தா போலீசு தலைமை நிலையத்திலுள்ள சித்திரவதை முகாமில் பல நாட்கள் அடைத்து வைத்து, போலீசு மிருகங்கள் அவர்களை வதைத்தன. பின்னர் "மிசா" சட்டத்தின் கீழ் இவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். 1977-ல் வங்கத்தில் 'இடதுசாரிகள்' ஆட்சிக்கு வந்ததும் அர்ச்சனா உள்ளிட்டு அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் கொடூரமான சித்திரவதையால் அர்ச்சனாவின் இடுப்புக்குக் கீழுள்ள பகுதி முழுவதும் முடமாகிப் போனது. சக்கர நாற்காலி மூலம்தான் அவர் நடமாட முடிந்தது.



அர்ச்சனா - தனது சகோதரருடன்

ஆனாலும் அர்ச்சனா தளர்ந்து விடவில்லை. தன்னை மிருகத்தனமாக வதைத்த போலீசு இன்ஸ்பெக்டர் ரஞ்சித்குகா நியோகி, போலீசுக்காரன் சந்தோஷ்தே ஆகியோர் மீது 1977 ஆகஸ்டில் அவர் வழக்கு தொடுத்தார். வழக்கு நடந்து கொண்டிருந்தபோது இக்காட்டுமிராண்டி போலீசாருக்கு 'இடதுசாரி' அரசு எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. மாறாக, இடதுகளின் ஆதரவோடு ரஞ்சித் குகா நியோகி, நகர உதவிக் கமிஷனராகவும் பின்னர் போலீசு துணை கமிஷனராகவும் பதவி உயர்வு பெற்றான். பரிசுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டு ஈராண்டுகளுக்கு முன்பு பதவியிலிருந்து ஓய்வு பெற்றான். அதேசமயம் அர்ச்சனா தொடுத்த வழக்கு நத்தை வேகத்தில்தான் நகர்ந்தது.

19 ஆண்டு கால நீண்ட போராட்டத்துக்குப் பிறகு கடந்த ஜூன் 5-ந் தேதியன்று இந்த வழக்கு முடிவுக்கு வந்தது. குற்றவாளிகளான போலீசுக்காரன்கள் நியோகி

www.padippakam.com



கும் சந்தோஷுக்கும் ஓராண்டு சிறைத்தண்டனையும் ரூ. 2000/- அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

''போலீசு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருப்பது எனது நீண்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றிதான்! இருப்பினும் நக்சலைட்டு தீவிரவாதிகள் என்று பொய்வழக்கு சோடிக்கப்பட்டு என்னைப் போல பலர் சித்திரவதைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கு எப்போது நீதி கிடைக்கும் என்று தெரியவில்லை'' என்று வேதனையுடன் கூறுகிறார் அர்ச்சனா.

## மேட்டுக் குடியினருக்கு வரிச்சலுகை! பாட்டாளிகளுக்கு பட்டை நாமம்! — போலிகளின் புதிய கொள்கை

பாட்டாளிகளின் கூட்டாளியாக மார்தட்டிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'கள் இப்போது மேட்டுக்குடியினரின் கூட்டாளிகளாகத் தங்களை நிரூபித்துக் கொண்டுள்ளனர். 16 கோடி ரூபாய் பற்றாக்குறையுடன் அண்மையில் மே. வங்க மாநில பட்ஜெட்டை சமர்ப்பித்த 'மார்க்சிஸ்டுகள்', மன்மோகன் சிங்கின் உண்மையான வாரிசு தாங்கள்தான் என்பதை காட்டிக் கொண்டுள்ளனர். மேட்டுக் குடியினர் பயன்படுத்தும் ஆடம்பரப் பொருட்களான குளிர்சாதனப் பெட்டி, மின்சார துடைப்பான், சலவை எந்திரம், வண்ணத் தொலைக்காட்சி முதலானவற்றுக்கு 'மார்க்சிஸ்டு' அரசு வரலாறு காணாத வரிச்சலுகையை அளித்துள்ளது.

அதேசமயம் அத்தியாவசியப் பணித்துறை ஊழியர்களின் உரிமையைப் பறித்துள்ளது. போலிக் கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கைப்படி, மருத்துவர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் அரசு வாடகைக்கு அமர்த்திக் கொள்ளும். அவர்களது சேவை திருப்திகரமாக இல்லாவிட்டால் நீக்கப்படுவர். இப்புதிய கொள்கையால் ஏற்கனவே உள்ள நிரந்திர ஊழியர்களின் கழுத்துக்கு கத்தி வைக்கப்பட்டுவிட்டது. நிரந்தர ஊழியர்கள் தமது உரிமைக்குப் போராடினால் அவர்களது வேலை பறிபோகும். ஒப்பந்த ஊழியர்கள் அந்தப் பணியில் அமர்த்தப்படுவார்கள். மறுபுறம், ஒப்பந்த ஊழியர்களும் போராட முடியாது. போராடினால் அவர்களது வேலையும் பறிபோகும். இப்புதிய கொள்கை மூலம் மாநிலத்தில் தொழில் அமைதி நிலவுவதாகக் காட்டி அந்நிய முதலீடுகளை வரவேற்க ஜோதிபாசு அரசு நாயாய் அலைகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாகச் சவடால் அடித்துக் கொண்டு, அந்நிய ஆடம்பர நுகர்பொருள் சந்தையை ஊக்குவித்தும் தொழிற்சங்க உரிமைகளைப் பறித்தும் ஏகாதிபத்திய விசுவாசத்தில் காங்கிரசு கயவாளிகளுக்கே முன்னோடியாகத் திகழ்கிறது, ஜோதிபாசு அரசு. இந்த லட்சணத்தில், தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்கவும், அவர்களை வேலையிலிருந்து வெளியேற்றவும் ஐக்கிய முன்னணி அரசு கொண்டு வந்த சிக்கன சீரமைப்பு நடவடிக்கையை எதிர்த்து சவடால் அடிக்க இத்துரோகிகளுக்கு என்ன அருகதை இருக்கிறது?



## 'நாகரிக' பிரிட்டனில் இட்லரின் வாரிசுகள்

'நாகரிக' ஏகாதிபத்திய நாடான பிரிட்டனில் குடியேறிய ஆசிய நாட்டுத் தொழிலாளர்களுக்கும், சிறுவியாபாரிகளும் அண்மைக் காலமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழும் அவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் இவர்களால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. நள்ளிரவில் திடீரென வீட்டின் மீது கற்கள் வீசப்படும்; அல்லது குண்டு வீசப்படும். வீட்டிலுள்ள கடிதப் பெட்டியில் மலமும் சாணமும் கிடக்கும். ''உயிர் பிழைக்க வேண்டுமானால் உன் நாட்டுக்கு ஓடு!'' என்று மொட்டை மிரட்டல் கடிதங்கள் வரும். வீட்டுச் சுவர்களில் ஆபாச வசைமொழிகள் கிறுக்கப்பட்டு அசிங்கப்படுத்தப்படும். ''சி-18'' என்ற பெயரில் தங்களை இனங்காட்டிக் கொள்ளும் இனவெறித் தீவிரவாதக் கும்பல்தான் இத்தகைய அட்டூழியங்களை நடத்தி வருகிறது.

போர் - 18 (Combat - 18) எனும் இந்த இனவெறிக் கும்பல் தங்களை இட்லரின் வாரிசுகளாகக் காட்டிக் கொள்கின்றன. ஆங்கில அகர வரிசையில் ''ஏ'' என்பது முதல் எழுத்தாகவும் ''ஹெச்'' என்பது 8-வது எழுத்தாகவும் உள்ளது. அடால்ப் ஹிட்லர் (Adolf Hitler) என்பதை சுருக்கமாக சங்கேதமொழியில் 18 என குறிப்பிடும் இவர்கள், இட்லரின் நினைவாக தமது குழுவின் பெயரையும் அமைத்துக் கொண்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இக்கும்பல் நடத்திவரும் இனவெறித் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. 1994-95-இல் 10,997 ஆக இருந்த தாக்குதல்கள் 1996 மார்ச் மாதத்திற்குள் 11,878 ஆக தீவிரமடைந்துள்ளன. இதுதவிர கடந்த ஆண்டில் மட்டும், அசிங்கமான சுவரெழுத்து, ஆபாசமாகத் திட்டுவது, இந்தியப் பெண்கள் நெற்றியில் பொட்டிட்டு வந்தால் அழிப்பது, ஆசிய தொழிலாளர்கள் மீது எச்சிலைத் துப்புவது, அழுகிய முட்டையை வீசுவது முதலான சிறுசிறு இனவெறிச் சம்பவங்கள் 1,30,000-க்கு மேல் நடந்துள்ளன.

உற்பத்தியை உலகமயமாக்கி வரும் ஏகாதிபத்தியங்களின் கொள்கையால் ஏழை நாடுகளிலிருந்து மேலை நாடுகளுக்கு பெருமளவில் தொழிலாளர்கள் குடியேறுகிறார்கள். அதேசமயம் ஏகாதிபத்திய உற்பத்தி முறையால் ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் அவற்றை உள்நாட்டு மக்கள் மீது திணிக்கும் ஆளும் வர்க்கங்கள், இனவெறியைக் கிளறிவிட்டு மக்களை திசைதிருப்பிக் குளிர்காய்கின்றன. ஏகாதிபத்திய நாடுகளின் ஜனநாயக சக்திகள் மற்றும் தொழிற்சங்கங்களின் கையாலாகாத்தனத்தால் இனவெறி சக்திகள் தொடர்ந்து பலம் பெறுவதும் தாக்குவதும் அதிகரித்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# தொழிற்சங்கத் தலைவர் உயிரோடு எரிப்பு ஆந்திர போலீசாரின் அட்டூழியம்

ஆந்திராவில் சிங்கரேணி கார்மீக சமயகா (SIKASA) எனும் தொழிற்சங்கத்தின் தலைவரான மாடிரெட்டி என்றழைக்கப்படும் ராமகாந்த் கடந்த ஜூன் 24-ந் தேதியன்று போலீசாரால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த இப்போராளியைக் கைது செய்ய போலீசார் நாயாய் அலைந்த போது, அவர் தலைமறைவாகி அடிலாபாத் மாவட்டத்திலுள் மஞ்சேரியல் எனும் கிராமத்தில் தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த வீட்டைக் கண்டறிந்த போலீசார், அதை நாற்புறமும் முற்றுகையிட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, அந்த வீட்டின் மீது பெட்ரோலை ஊற்றி கையெறி குண்டுகளை வீசி அந்த வீட்டை எரியூட்டியுள்ளனர். அந்த வீட்டில் ராமகாந்த்துடன் தங்கியிருந்த ஒரு பெண்ணும் இத்தீயில் உயிரோடு எரிந்து சாம்பலாகிப் போனார். மஞ்சேரியல் கிராமத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையிலேயே இந்த அட்டூழியம் நடந்துள்ளது.

மூடிமறைக்கப்பட்ட இக் கொடுஞ்செயலை வெளியுலகுக்கு அறிவித்த ஆந்திர சிவில் உரிமைக் கழகத் தலைவரான எம்.டி.கான். இக்கோரக் கொலையை எதிர்த்து அடிலாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதோடு, தேசிய மனித உரிமைக் கமிஷன் மூலம் விசாரணையும் கோரியுள்ளார். மிக மோசமான கிரிமினல் குற்றவாளியாக இருந்தால் கூட உயிரோடு பிடித்து கைது செய்து நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்க வேண்டும் என்கிறது சட்டம். ஆனால் ஆந்திர பயங்கரவாதப் போலீசாரோ, நிராயுதபாணிகளான புரட்சியாளர்களை நரவேட்டையாடுவதையே தமது சட்டமாக்கிக் கொண்டுள்ளனர். ஆந்திர போலீசாரின் அரசு பயங்கரவாத அட்டூழியங்கள் இப்படித் தொடரும் போதே, நக்சல்பாரி புரட்சியாளர்களான மக்கள் யுத்தக் குழுவின் மீதும் அதன் மக்கள்திரள் அமைப்புகள் மீதும் 'பயங்கரவாத' முத்திரை குத்தி சந்திரபாபு நாயுடு அரசு தடைவிதித்துள்ளது.

# அகத் கப்பல் விவகாரம்: ஈழத் தமிழர்கள் விடுதலை "தினமணி"யின் பொய்ச் செய்தி

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழகத்தில் ஈழ ஆதரவாளர்கள் மீது "தடா" சட்டம் ஏவப்பட்டு கடுமையான அடக்குமுறை நிலவிய காலம் அது. 1993-ஆம் ஆண்டு ஜனவரி 13-ம் நாளன்று சென்னையிலிருந்து 440 கடல் மைல் தொலைவில் — இந்தியக் கடல் எல்லைக்கு வெகு தொலைவில் — சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி "அகத்" என்ற சிறிய கப்பல் வந்து கொண்டிருந்தது. அக்கப்பலில் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவுடன் 19 பேர் இருந்தனர்.

"ஐ.என்.எஸ். கிர்பான்" என்ற இந்தியக் கடற்படைக் கப்பலிலிருந்த அதிரடிப்படையினர் அகத் கப்பலை வழிமறித்து, கண் மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அகத் கப்பல் தீப்பற்றிக் கொண்டது. அத்தீயில் சிக்கி கிட்டுவுடன் கப்பலில் இருந்த 9 பேர் மாண்டனர். படுகாயமடைந்த எஞ்சிய 9 பேர் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் "தடா" சட்டத்தின் கீழ் விசாகப்பட்டினம் சிறையில் அடைக்கப்பட்டனர். கிட்டுவும் அகத் கப்பலில் இருந்த ஈழத் தமிழர்களும் பயங்கரவாத சதித்திட்டத்துடன் ஆயுதங்கள் - வெடிமருந்துகளோடு இந்தியாவை நோக்கி வந்து கொண்டிருந்தனர் என்றும், இந்தியக் கடற்படை வழிமறித்ததும் தமது கப்பலுக்குத் தீவைத்துவிட்டு கிட்டுவும் 9 பேரும் சயனைடு தின்று தற்கொலை செய்து கொண்டனர் என்றும் மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) கதை கட்டியது.

ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேரையும் "தடா" சிறப்பு நீதிமன்றம், நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது. நீதிபதி லட்சுமண ரெட்டி தனது 86 பக்க தீர்ப்பு அறிக்கையில், 9 ஈழத் தமிழர்களின் மீதான கிரிமினல் - பயங்கரவாதக் குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவர்கள் இந்தியாவின் ஆதிபத்திய உரிமைக்கு எதிராகவோ, கடற்படை ஊழியர்களுக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் கூறியுள்ளார். அகத் கப்பலின் தலைமை மாலுமி ஜெயசந்திரன் உள்ளிட்ட 9 பேரும் அளித்த சாட்சியங்களின்படி, அகத் கப்பலை வழிமறித்து துப்பாக்கிச் சூடு நடத்தி தீயிட்டுக் கொளுத்தியதையும், கைது செய்யப்பட்டோரை சித்திரவதை செய்ததையும் வன்மையாகச் சாடியுள்ளார். இக்கப்பல் மிகச் சிறியதாக உள்ள நிலையில் 110 டன் எடையுள்ள ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் ஏற்றி வர அடிப்படையே இல்லை என்று சி.பி.ஐ.யின் அண்டப்புளுகை அம்பலப்படுத்தியுள்ளார்.



'அகத்' கப்பலின் தலைமை மாலுமி ஜெயச்சந்திரன்

மேலாதிக்க வெறியோடு ஆழ்கடலிலும் இந்தியா நடத்திய இந்த அட்டூழியம் அம்பலப்பட்டுள்ள நிலையில், இச் செய்தியை வெட்டிக் குறுக்கியும் திரித்துப் புரட்டியும் "தினமணி" நாளேடு (ஜூன் 30) "விசாகையில் கைதான 'புலிகள்' விடுதலை" என்ற தலைப்பில் ஒரு துணுக்குச் செய்தியை வெளியிட்டுள்ளது. இவர்களிடம் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு "தடா" சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டிருந்தனர் என்று முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைத்துள்ளது. "அகத்" கப்பல் பற்றி அச்செய்தியில் ஒரு வார்த்தை கூட இல்லை.

www.padippakam.com



விடுதிகளில் மதுபானங்கள் பரிமாறும் பெண்கள், இரவு விடுதிகளில் நடனமாடும் பெண்கள், சிவப்பு விளக்குப் பகுதிகளில் தொழில் புரியும் பெண்கள் - இவர்கள் சமூகத்தின் மிகவும் தாழ்ந்த, பலவீனமான பிரிவினராகக் கருதப்படுகின்றனர். இவர்களைத் தமது அவல வாழ்விலிருந்து விடுவிப்பது என்கிற பெயரில் மராட்டிய அரசு தற்போது மேற்கொண்டு வரும் நடவடிக்கை களுக்கு எதிராக இவர்கள் எழுப்பியுள்ள கேள்விகள், கோரிக்கைகள் இந்திய ஆட்சியாளர்கள் அனைவருடைய கையாலாகாத்தனத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

இரவு எட்டரை மணிக்கு மேல் உணவு - மதுபான விடுதிகளிலும், இரவு விடுதிகளிலும் பெண்கள் வேலை செய்வதை இப்போது மராட்டிய அரசு தடை செய்துள்ளது. இவர்களால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழுகிறது என்பதுதான் அரசு சொல்லும் காரணம். மும்பய் - தானா வட்டாரத்தில் மட்டுமே 1300க்கும் மேற்பட்ட விடுதிகளில் 40,000 பெண்கள் மது - உணவு பரிமாறுபவர்களாகவும், நடனமாடுபவர்களாகவும், பாடகிகளாகவும் வேலை செய்கின்றனர். கர்நாடகா, கேரளா, உத்திரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான் என்று பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மும்பய் பெருநகரில் வந்து குடியேறியவர்கள், இவர்கள். அரசின் தடையுத்திரவினால் வேலையிழக்கும் இவர்கள் சிவப்பு விளக்குப் பகுதியில் விபச்சாரிகளாகத் தஞ்சமடைவதைத் தவிர வேறு வழியில்லை.



கடந்த ஜூலை 10-ந் தேதி, மும்பய் சுதந்திர மைதானத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் கூடி ''சாம்ராட் விடுதி'' வரை ஒரு பேரணி நடத்தி அரசு தடை உத்திரவுக்கு கடும் எதிர்ப்பைக் காட்டினர். பேரணியில் கலந்து கொண்ட ஐந்து குழந்தைகளுக்குத் தாயான 27 வயது சங்கீதா பட்டீல் கேட்கிறார், ''எனக்கும் இந்த வேலை பிடிக்கவில்லை தான். நான் கல்வியறிவில்லதாவள். முன்பு நான் ஆலைத் தொழிலாளியாக இருந்தேன். மாதம் 1000 ரூபாய் சம்பளத்தை வைத்துக் கொண்டு பிழைக்க முடியவில்லை. இப்போது மாதம் 5000 ரூபாய்க்கு விடுதியில் நடனக்காரியாக இருக்கிறேன். இந்த வேலையும் பறிபோனால் என் குடும்பம் என்னாவது?''

சுனிதா என்கிற இன்னொரு பெண் கேட்கிறார், ''இதே அளவு சம்பளத்துடன் வேறு ஏதாவது வேலை அரசாங்கம் தர முடியுமா? அதனால் முடியாதென்றால் இருக்கும் வேலையையும் அரசாங்கம் ஏன் தட்டிப் பறிக்க வேண்டும்?''

இந்தக் கேள்விகளுக்கு அரசின் தொழிலாளர் துறைச் செயலாளர், ஜாயஸ் சங்கரன் திமிரோடு பதில் சொல்கிறார், ''மதுபானம் பரிமாறுபவர்களுக்குத்தான் தடை. நடனக்காரிகளுக்குத் தடை இல்லை. மதுபானம் பரிமாறுபவர்கள் சட்டத்தை உடைக்கும் குற்றம் புரிபவர்கள். ஆகவே அவர்களுக்கு மாற்று வேலைகள் தரும் பிரச்சினையே எழவில்லை''

இதற்கு பதிலாக ''விமான சேவையிலும், தொலைபேசித் தொடர்பகங்களிலும் பெண்கள் இரவு வேலை செய்வதில்லையா? அவர்களை மட்டும் மதிப்போடு பார்க்கும்போது, எங்களை மட்டும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினைக்குரியவர்கள் என்று பார்ப்பது ஏன்?'' என்று கேட்கிறார் மதுபானம் பரிமாறும் சப்னம் என்ற பெண். விமான சேவையில் இளம் வயது பணிப்பெண்களை மட்டுமே சேர்த்துக்

# ''வேலை கொடு! இல்லையேல்


படிப்பகம்

www.padippakam.com





# எங்கள் வழியில் வாழ விடு!''

கொண்டு மது பரிமாறி ஆள்மயக்கும் வேலை செய்யச் சொல்லுகிறது, இந்த அரசு.

இவர்களில் கணிசமானோர் விபச்சாரத்தில் ஈடுபடுவதும், தூண்டுவதும் உண்டுதான் என்றாலும் அதற்காக இவர்கள் மீது மட்டும் குற்றஞ்சாட்டுவது சரியா? இதெல்லாம் இந்தப் பெண்களே தெரிந்தெடுத்துக் கொண்டவையா?

''சினிமாப்பாட்டுக்குத் தானே நடனமாடுகிறோம். அதைத் தடை செய்யாத அரசு, எங்களுக்கு மட்டும் தடைவிதிப்பது சரியா? இதுவே ஐந்து நட்சத்திர விடுதிகளில் நடப்பதை மட்டும் அனுமதிப்பது ஏன்?'' என்று அந்தப் பெண்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலில்லை.

இதேநாளில் இதே மும்பையின் கே.சி. கல்லூரி அரங்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் கூடி பாரதீய ஜனதா - சிவசேனா அமைச்சர் பாபன் ராவ் கோளப்பிடம் பல கேள்விகள் எழுப்பித் திணறிடித்தார்.

''விபச்சாரத்திலிருந்து பதினெட்டு வயதுக்கும் குறைவான சிறுமிகளை மீட்பதாக இழுத்துச் செல்லும் அரசாங்கம் அவர்களுடைய மறுவாழ்வுக்கு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா?''

''சிறுமிகளோடு பெரிய பெண்களையும் இழுத்துக் கொண்டு போய் சிறுமியர் விடுதியில் பூட்டி வைக்கிறீர்களே, அது எங்களுக்குச் சிறையிலடைப்பது போலத்தான்! சிவப்பு விளக்குப் பகுதியையே எங்கள் சொந்த வீடாகக் கருதுகிறோம். போகவிடுங்கள்''

''இங்கிருந்து மீட்டுக் கொண்டு போய் மீண்டும் எங்கள் கிராமத்திலேயே விடுகிறீர்கள். அங்கே எங்களை யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. பிழைப்புத் தேடி மீண்டும் நாங்கள் சிவப்பு விளக்குப் பகுதிக்கே திரும்புவதை விட வேறுவழியில்லை'' என்று அடுக்குகிறார்கள், தமது அவலநிலையை.

''சிவப்பு விளக்குப் பகுதியிலேயே எங்களுக்குப் போதிய மருத்துவ சோதனையும் சிகிச்சையும் தரவேண்டும். எங்கள் குழந்தைகளுக்குப் பள்ளி மற்றும் தங்கும் விடுதிகள் ஏற்பாடு செய்யுங்கள். போலீசாரும், தரகர்களும், குண்டர்களும் ''ஹாஃப்தா'' எனப்படும் மாமூல் வசூலை நிறுத்தினாலே போதும்'' என்று கோருகிறார்கள்.

மந்திரியோ வழக்கம்போல போலி வாக்குறுதிகளை வழங்கிவிட்டு நழுவிக் கொண்டாரே தவிர தகுந்த பதிலோ, நடவடிக்கையோ ஏதும் இல்லை.

☆ ☆ ☆

''வேலை கொடு! இல்லையேல் எங்கள் வழியில் வாழ விடு!'' என்று கோரி இந்தப் பெண்கள் எழுப்பும் குரல் உண்மையில் இந்திய ஆட்சியாளர்களுக்கு ஒரு சவால்!

சமூகத்தின் மதிப்புமிக்கவர்களாக உழைத்துப் பிழைக்கும் வேலை வாய்ப்பும் வாழ்க்கையும் தராது ஒரு கீழ்நிலையான தொழிலுக்குத் தள்ளப்பட்டதற்கே இந்த ஆட்சியாளர்கள்தாம் பொறுப்பு!

அந்நியச் செலாவணி சம்பாதிப்பதற்காக பாலுறவுச் சுற்றுலா விடுதிகளை நாடெங்கும் திறந்தும், கோவா மாநிலத்தையே மிகப் பெரிய விபச்சாரத் தளமாக மாற்றியும், சிறுமிகளையே வெளிநாட்டவர்களுக்குத் தாரை வார்த்தும் நாட்டின் சுயமரியாதையையே விலை பேசி விற்கும் இந்த அரசியல்வாதிகளுக்கு இப்படிப்பட்ட சீர்திருத்தம் பேசுவதற்கு அருகதையிருக்கிறதா?

அனைவருக்கும் வேலையும் வாழ்க்கை உத்திரவாதமும் அளிக்க முடியாத இந்த ஆட்சியாளர்கள் எவருக்கும் ஆளவும் உரிமையில்லை.


படிப்பகம்

www.padippakam.com

## அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம்:

# அமெரிக்காவின் மேலாதிக்கம் இந்தியாவின் பம்மாத்து!

"சூப்பர் 301" என்ற தனது வர்த்தக தடைச் சட்டத்தைக் காட்டியும், ஏவுகணை விரிவாக்கக் கட்டுப்பாடு ஒப்பந்தம் மூலமும் இந்தியாவை மிரட்டிப் பணிய வைத்த அமெரிக்க வல்லரசு, இப்போது அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தத்தைக் கையில் ஏந்திக் கொண்டு அச்சுறுத்தக் கிளம்பியுள்ளது.

கடந்த ஜூன் 28-ம் நாளன்று ஐ.நா.மன்றத்தின் சார்பில் ஜெனிவாவில் 61 உறுப்பினர் நாடுகள் பங்கேற்ற ஆயுதக் குறைப்பு மாநாடு நடந்தது. அதில் கொண்டு வரப்பட்ட பல்வகை அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தில் (CTBT) அனைத்து நாடுகளும் கையெழுத்திடுவதென தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை இந்தியா ஏற்க மறுத்து, அதைத் திருத்தியமைக்க வேண்டுமெனக் கோரியது. தங்களது கோரிக்கைகளின் படி ஒப்பந்தம் திருத்தியமைக்கப்படாவிட்டால், அதில் கையெழுத்திட மாட்டோம் என்றும் தெரிவித்தது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில குறைபாடுகளை எதிர்ப்பதாகக் கூறும் பாகிஸ்தான், ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாவிட்டால் தாங்களும் கையெழுத்திட மாட்டோம் என்று மறுத்து விட்டது.

அணு ஆயுத ஆற்றல் பெற்ற அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ரஷ்யா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும், அணு ஆயுத ஆற்றலில் தொடக்க நிலையிலுள்ள இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளும் முதன்மையாகக் கையெழுத்திட்டால்தான் இந்த ஒப்பந்தம் பொருளுடையதாக இருக்கும். எனவே, இந்தியாவின் கோரிக்கைகளைப் பரிசீலித்து திருத்தியமைக்கப்பட்ட புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜூலை 29-ல் அனைத்து நாடுகளும் கூடுவதென தீர்மானிக்கப்பட்டது. இதற்கிடையே இந்தியாவுடன் அமெரிக்கா சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தி முட்டுக்கட்டை போட வேண்டாமெனக் கோரியது. ஆனாலும் இந்தியா தனது நிலையில் உறுதியாக இருந்து கையெழுத்திட மறுத்து விட்டதால், ஜூலை 29-க்குப் பின்னரும் ஒப்பந்தம் நிறைவேறாமல் இழுபறியில் நிற்கிறது.

"அனைத்து வகை அணு ஆயுதங்களும் அழித்தொழிக்கப்பட வேண்டும். ஆயுதக் குறைப்புக்கு குறிப்பிட்ட காலக் கெடுவை வரையறுக்க வேண்டும். அணுவாற்றல் நிலையங்களைக் கண்காணித்தல், சோதித்தறிதல் என்ற பெயரில் வல்லரசுகள் ஒரு நாட்டின் சுயாதிபத்திய உரிமையைப் பறிக்கும் நடவடிக்கையில் இறங்கக் கூடாது. அணு ஆயுத தடை ஒப்பந்தம் என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், யாருக்கும் பாகுபாடு இல்லாத வகையிலும் அமைய வேண்டும்" என்ற கோரிக்கையுடன் தற்போதைய ஒப்பந்தத்தை இந்தியா எதிர்க்கிறது. தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய தாக புதிய ஒப்பந்தம் அமைந்தால் மட்டுமே கையெழுத்திடுவோம் என்று வாதிடுகிறது.

"இந்தியாவின் அண்டை நாடான சீனா அணு ஆயுத ஆற்றல் மிக்க நாடாகும். பாகிஸ்தான் இதில் தொடக்க நிலையில் உள்ளது. சீனாவின் உதவியோடு பாகிஸ்தான் அணு ஆயுதச் சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் நாட்டின் பாதுகாப்பு நலன் கருதியே, தற்போதைய ஒப்பந்தத்தை எதிர்க்கிறோம் என்று வெளி விவகாரத்துறை அமைச்சரும் அதிகாரிகளும் விளக்கமளிக்கின்றனர்.

கடந்த 40 ஆண்டுகளாக அணு ஆயுதங்களுக்கு எதிராகக் குரலெழுப்பி வந்த இந்தியா, இப்போது ஒப்பந்தத்தை எதிர்த்து வாதிடுவதைக் கண்டு உலக நாடுகள் புருவத்தை உயர்த்துகின்றன. மறுபுறம், இந்தியா தனது கோரிக்கைகளை உலக நாடுகளிடம் விளக்கி ஏற்கச் செய்யவும் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நாங்கள் அணு ஆயுதச் சோதனைகள் நடத்துவோம் என்று பகிரங்கமாக அறிவிப்பதை விடுத்து, தேசிய நலன் சுயாதிபத்திய உரிமை என்று பூசிமெழுகி இந்தியா வாதிடுவதால், உலக நாடுகளிடமிருந்து அது தனிமைப்பட்டு நிற்கிறது. அணு ஆயுத வல்லரசுகள் இதைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்தியா மட்டும்தான் உலக அமைதிக்கு முட்டுக்கட்டையாக இருப்பது போல் சித்தரித்து வருகின்றன.



எல்லா வற்றுக்கும் மேலாக, ஏகாதிபத்திய வல்லரசுகளால் திணிக்கப்படும் அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தமே மோசடியானது. உலகின் மீது அணு ஆயுத மேலாண்மையை நிலைநாட்டும் நோக்கத்தோடுதான் அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகள் இந்த ஒப்பந்தத்தைக் கொண்டு வந்துள்ளன. இந்த ஒப்பந்தப்படி, தற்போதுள்ள அணு ஆயுதங்களை அதே வடிவில் பெருக்குவதை மட்டுமே கட்டுப்படுத்த முடியும். புதிய தொழில் நுட்பத்துடன் புதிய வகை அணு ஆயுதங்கள் பெருகுவதைத் தடுக்க முடியாது. நிலத்தடி குண்டு வெடிப்பு முறை அல்லாத இதர வகையிலான - கம்ப்யூட்டர் முறையிலான அணு ஆயுதச் சோதனைகளை அது தடை செய்யவில்லை. தற்போது எந்த வகையிலான, எவ்வளவு ஆயுதங்கள் எந்தெந்த நாடுகளில் உள்ளன என்பதையும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் கண்டறிய முடியாது. அணுவாற்றல் அல்லாத நாடுகளுக்கு அணு ஆயுத வல்லரசுகள் தொழில் நுட்பத்தைக் கொடுத்து உதவி செய்வதை இந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தாது. மேலும், அணு ஆயுதங்களைக் குறைக்கவோ அல்லது முற்றாக அழிக்கவோ வல்லரசுகளுக்கு குறிப்பிட்ட காலக்கெடு எதையும் இந்த ஒப்பந்தம் வரையறுக்கவில்லை.

தற்போதைய ஒப்பந்தத்துக்கு ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்பு உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி பிரெஞ்சு வல்லரசு தொடர்ச்சியாக அணுகுண்டு சோதனைகளை நடத்தியது. தற்போதைய ஒப்பந்தத்திற்கான மாநாடுக்கு முதல் நாளில் கூட சீனா அணு ஆயுதச் சோதனையை நடத்தியுள்ளது. இந்தச் சாவு வியாபாரிகள் தான், ஆயுதக் குறைப்பு - சமாதான - அணு ஆயுதமற்ற உலகம் பற்றி இப்பேது வாய் கிழியப் பேசுகிறார்கள்.

தற்போதைய ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாவிட்டாலும் கூட, அமெரிக்கா உள்ளிட்ட அணு ஆயுத ஆற்றல் பெற்ற 5 நாடுகளும் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளன. ஜெனிவா மாநாட்டில் ஒத்த கருத்து ஏற்பட்டால், ஐ.நா. பொதுச் சபைக்கு இந்த ஒப்பந்தம்



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பப்படும். அங்கு மற்ற நாடுகளும் இதை ஆதரித்து விட்டால், அடுத்த மூன்றாண்டுகளில் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும். அப்போது இந்தியாவும் இதை ஏற்க வேண்டிய நிர்பந்தம் வரும். அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகள், ஒப்பந்தத்தை ஏற்ற நாடுகளுடன் கூடிப் பேசி இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும்; அல்லது இதர வழிமுறைகள் மூலம் மிரட்டிப் பணிய வைக்கும்.

இந்த உண்மைகளை நாட்டு மக்களிடம் விளக்கி, அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிரான மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைக்க இந்திய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. மாறாக, தமது பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு இந்த ஒப்பந்தம் தடையாக அமைந்து விடுமோ என்ற நோக்கத்தில்தான் எதிர்க்கின்றனர். பாரதீய ஜனதா, காங்கிரசு ஆகிய ஆளும் வர்க்க பாசிசக் கட்சிகளும் சரி, முற்போக்கு - சமூக

**இந்தியாவின் ஒப்பந்த எதிர்ப்பு நாடகத்தின் குறி: ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் தகுதி**

நீதி — ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால் அடிக்கும் ஜனதா தளம் மற்றும் 'இடதுசாரி' கட்சிகளும் சரி, இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கக் கொள்கையை ஆதரித்தும் நியாயப்படுத்தியுமே வருகின்றன.

புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய முன்னணி அரசுக்கு, இப்படி ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேச நலன் என்று சில ஆரம்ப சூரத்தனங்களைக் காட்டி மக்களிடம் "ஸ்டண்ட்" அடிக்க வேண்டிய அவசியமும் உள்ளது. இது தவிர, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் தகுதியைப் பெறும் நோக்கத்தோடு, ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் பேரம் பேசுவதற்கு இப்படி எதிர்ப்பு நாடகமாடுவதும் இந்தியாவுக்குத் தேவையாக உள்ளது. மற்றபடி, அணு ஆயுதச் சோதனை விவகாரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாட இந்தியாவுக்கு அடிப்படையே இல்லை. ஏற்கனவே அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் ஏகாதிபத்தியங்களிடம் நாட்டை மறு அடகு வைத்து விட்ட இத்துரோகிகளுக்கு, அணு ஆயுத விவகாரத்தில் மட்டும் சவடால் அடிக்க என்ன அருகதை இருக்கிறது?

— குமார்

# ஈழம்: புலிகளின் இராணுவ சாகசம் நெருக்கடியைத் தீர்க்குமா?

இலங்கையில் முல்லைத் தீவில் இருக்கும் சிங்கள இராணுவ முகாமின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய "ஓயாத அலைகள்" தாக்குதல் நடவடிக்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன. பெருமளவான வெடி மருந்துப் பொருட்களையும் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளனர்; யாழ் வீழ்ச்சிக்குப் பின் சிங்கள இராணுவத்தின் மீது புலிகள் நடத்தியுள்ள குறிப்பிடத்தக்க தாக்குதல் இது. எனினும் புலிகளின் இவ்வெற்றியானது, "பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள ஈழப் போராட்டத்தை உந்தித் தள்ள உதவுமா?" அல்லது "சந்திரிகா அரசுடன் புலிகள் ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாகப் பேரம் நடத்த உதவுமா?" என்பதே நம்முன்னுள்ள கேள்வி.



புலிகளோடு அதிருப்தி கொண்டு யாழை நோக்கி..

★★★

கடந்த வருடம் அக்டோபரில் யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றுவதற்காக, "சூரியஒளி 1" என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது சந்திரிகா அரசு. இரு மாதங்கள் தொடர்ச்சியாக நடந்த சண்டையின் பின், யாழ் மற்றும் வாலிகாமம் பகுதிகளை சிங்கள இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. இதன்பின் இவ்வருடம் ஏப்ரல் மாதம் "சூரிய ஒளி-2" என்ற நடவடிக்கையின் மூலம், புலிகள் யாழை விட்டுப் பின் வாங்கிச் சென்ற தென்மாநகராட்சி பகுதியின் மீது தாக்குதல் தொடுத்துக் கைப்பற்றியது இராணுவம். இறுதியாக "சூரிய ஒளி-3" நடவடிக்கையின் மூலம் வடமாநகராட்சி பகுதியை வீழ்த்தி, இன்று யாழ் தீபகற்பம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து சிவில் நிர்வாகத்தையும் நடத்தி வருகிறது சிங்கள இராணுவம்.

யாழ் நகரில் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த பொழுதே, பெருவாரியான மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறத் துவங்கி விட்டனர்; புலிகளும் தங்கள் பங்கிற்கு மக்களை நிர்ப்பந்தமாக வெளியேற்றினர். இதன் மூலம், ஆள் அரவமற்ற யாழ் நகரைக் கைப்பற்றிய சந்திரிகா அரசு இராணுவ ரீதியாக மட்டுமே வெற்றி அடைந்திருப்பதாகச் சித்தரித்தனர் புலிகள். ஆனால் இன்று பெருவாரியான யாழ் பகுதி மக்கள் புலிகளிடமிருந்து விடுபட்டு, சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தங்கள் பிறந்த பூமிக்குத் திரும்பி விட்டனர்; இது சந்திரிகா அரசுக்குத் தானே வலிய வந்து கிடைத்த அரசியல் வெற்றியாகும்.

சூரிய ஒலி நடவடிக்கைகளின் பின் புலிகள் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதோடு, கடந்த ப[illegible] தாண்டுகளில் ஈழப் போராட்டத்தின் அக மற்றும் புற நிலைமைகளில் ப[illegible] விதப் பாதக மாற்றங்கள் நிகழ்ந்து வி[illegible] டன. 1983-இல் ஈழ விடுதலை ஆயுத போராட்டம் தற்காப்பு நிலையி[illegible] இருந்தபொழுது, சிங்கள இராணு[illegible] வத்தை எதிர்த்து விடுதலைப் புலி[illegible] களையும் உள்ளிட்டுப் பல போராளி[illegible] குழுக்கள் களத்தில் நின்றன. இன்[illegible] புலிகளின் பாசிசப் போக்கினால் ஈ[illegible] விடுதலைக்குப் போராடும் பிற குழு[illegible] கள் யாழில் இயங்க முடியவில்லை[illegible]



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து நடைபெற்று வரும் போரினால் எழுந்துள்ள இடர்ப்பாடுகளும், புலிகளின் அரசியல் அற்ற இராணுவத் தலைமைப் பண்பும் யாழ் பகுதி மக்களை விடுதலைப் புலிகளிடம் அதிருப்தி கொள்ளச் செய்து விட்டன; மாற்றுத் தலைமையின்றி இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவிக்கின்றனர், அவர்கள்.

தமிழகத்திலும் ஈழப்போராளிகளுக்கான ஆதரவு பின் தங்கி விட்டது; சிங்கள அரசு பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தி சர்வதேச அளவில் எழுந்த கண்டனக் குரல்களும் அடங்கி விட்டன; மலேசியா, சுவிஸ், கனடா, ஜெர்மனி அரசுகள், தங்கள் நாடுகளில் புலிகளுக்கு ஆதரவாக நடைபெறும் பிரச்சாரம் - ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கி விட்டன.

இராணுவ - அரசியல்ரீதியில் கிடைத்த இந்த வெற்றிகளை உறுதி செய்து கொள்ள சந்திரிகா அரசு, "இராணுவத்தை வலுப்படுத்துவது; புலிகளைத் தனது மோசடி அரசியல் தீர்வு திட்டத்தை ஏற்க வைக்க நிர்பந்தம் கொடுப்பது; புலிகளிடம் அதிருப்தி கொண்டு திரும்பி வந்த யாழ் மக்களை, தன் பக்கம் வென்றெடுக்கப் பொருளாதாரத் தடை உத்தரவைத் தளர்த்துவது" என முனைந்து செயல்பட்டு வருகிறது.

• யாழ் வீழ்ந்த பின்பு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான யு.என்.பி., சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டத்தில் இரு மாறுதல்களைக் கோரியது. "இலங்கை ஒற்றையாட்சியாக - ஒரே அரசாக இருப்பதையும், பௌத்த மதம் மட்டுமே அரசு மதமாக இருப்பதையும் உறுதிப்படுத்தும் அரசியல் சாசனப் பிரிவுகளைத் திருத்தக் கூடாது" என்பது தான் யு.என்.பி-யின் கோரிக்கைகள். சந்திரிகா அரசின் நிதியமைச்சர் பீரீஸ், "அரசியல் தீர்வுக்கு இருந்து வந்த தடை நீங்கி விட்டது" என யு.என்.பி-யின் கோரிக்கைகளை வரவேற்றுள்ளார். ஈழப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மோசடி அரசியல் திட்டத்தின் மூலம் ஈழத் தமிழர்களுக்கு 'கண்துடைப்பு மாகாண உரிமை' கூட கிடைத்து விடக் கூடாது என்பதில் தற்பொழுது சந்திரிகாவும் சிங்களப் பேரினவாதிகளோடு இணங்கிப் போனார்.



இராணுவக் கெடுபிடிகளால்
புலிகள் வெளிப்படையாக இயங்க முடியவில்லை

• பொருளாதாரத் தடையுத்தரவைத் தளர்த்தி அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்குவது; பேருந்துகளை இயக்குவது போன்ற சலுகைகளை அளித்து மக்களைக் கவர முயற்சிக்கிறது சந்திரிகா அரசு.

• யாழ் தீபகற்பத்தை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கும் முகமாக "யாழ் புனரமைப்புத் திட்டம்" அறிவிக்கப்பட்டுள்ளது; சந்திரிகாவுக்கு உதவ அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் ஏகாதிபத்தியங்களும் இந்தியாவும் முன் வந்துள்ளன. இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு முழுமையும் தன்னார்வக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

• முன்னெப்போதும் இல்லாத வகையில் 1,00,000 படை வீரர்களைக் கொண்டு சிங்கள இராணுவம் பலமிக்கதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது; இது தவிர தொண்டர் படை என்ற பெயரில் 5000 பேர் கொண்ட சட்டபூர்வ சிங்கள காடையர் படைப்பிரிவும் கட்டப்படுகிறது. மேலும் சமீபத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம், இலங்கைக்கு ஆயுதம் வழங்கக் கூடாது என்ற தடையைத் தளர்த்தி ஆறு ரோந்துப் படகுகளை வழங்கியுள்ளது. ஹெலிகாப்டர்கள், நவீன துப்பாக்கிகள் வழங்கவும், இலங்கை இராணுவத்துடன் இணைந்து அமெரிக்க இராணுவம் பயிற்சியில் ஈடுபடவும் கிளிண்டன் அரசு முன் வந்துள்ளது.

ஈழப் போரின் இப்பின்னடைவுக்கு விடுதலைப் புலிகள், "நவீன ஆயுதங்கள் இல்லாதது; படையில் ஆள்பலம் இல்லாதது" போன்ற இரண்டாம்பட்ச காரணங்களை முன் வைக்கின்றனர். பதிமூன்று ஆண்டுகளாக நடந்து வரும் போரினால் ஒரு தலைமுறையே இறந்து போனதாலும், இலட்சக்கணக்கானோர் அகதிகளாக வெளி நாடுகளில் தஞ்சமடைந்திருப்பதாலும் படைக்குப் போராளிகளைத் திரட்டுவது கடினமானதுதான்; எனினும் சக போராளிக் குழுக்களையும் மாற்று கருத்துக் கொண்டோரையும் கொன்றொழித்த, நடுநிலை சக்திகளை எதிரியின் பக்கம் விரட்டியடித்த புலிகளின் பாசிசப் போக்கிற்கும் இதில் பங்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

"எதிரியின் தனிப்பட்ட நிலைகளைத் தாக்கி அழிப்பது (கொழும்பு பெட்ரோல் கிடங்கு); தனிநபர் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடுவது (கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்பு); இராணுவ முகாம்களின் மீது திடீர் தாக்குதல் நடத்துவது (முல்லைத் தீவு) — இவை போன்ற கொரில்லா தாக்குதல்களின் மூலம் சிங்கள இராணுவத்தை முகாமுக்குள் முடமாக்குவது; யாழை மீளக் கைப்பற்றுவது; சந்திரிகா அரசை, தன்னை மட்டுமே ஈழ மக்களின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகரிக்கச் செய்து பேச்சு வார்த்தை நடத்துவது" புலிகளின் திட்டமாக இருக்கலாம்.

சந்திரிகாவின் மோசடி அரசியல் திட்டத்தையும், யாழ் தீபகற்பத்தை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்க்கும் துரோகத்தையும் அம்பலப்படுத்தி யாழ் மக்களை அணி திரட்டும் அரசியல் கண்ணோட்டமின்றி உள்ளனர் புலிகள்; மாறாக, சிங்கள இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையே எழும் முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைத் திரட்டுவதைத்தான் அரசியல் வழியாகக் கொண்டுள்ளனர்; மேலும், "போரை நிறுத்தினாலே பேச்சு வார்த்தை" எனக் கூறி வந்த புலிகள், தற்பொழுது, "மூன்றாவது சக்தி தலையிட்டால் பேச்சு வார்த்தைக்குத் தயார்" என வெளிநாடுகளில் இருந்து அறிக்கை விடுகின்றனர். இது புலிகளின் வர்க்க சமரசக் கண்ணோட்டமாகும்; இச்சமரசத்தைப் புலிகளின் போராட்டம் நெடுகிலும் காணமுடியும்.

இப்பாதக நிலையிலும்கூட இலங்கை எங்குமே மக்களின் எழுச்சிக்கான சாதகமான நிலைமைகள் எழுந்து வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# சிறப்பு முகாம் சித்திரவதைகள்

மதுரை மாவட்டத்தில் மேலூர் கிளைச் சிறையிலுள்ள சிறப்பு முகாமில், 32 ஈழத் தமிழர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாகச் சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசு இவர்களை அகதிகள் என ஒத்துக் கொண்டுள்ள போதும், சர்வதேச அகதிகள் சட்ட விதிகளுக்குப் புறம்பாக வெளியில் விட மறுத்து வருகிறது.

சிறைக் கைதிகளைப் போல இந்த 32 ஈழத் தமிழர்களும் காற்றோட்டமற்ற, சூரிய வெளிச்சமும் அண்டாத எட்டு சிறிய அறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்; சுகாதாரமற்ற, புழுக்கம் நிறைந்த அந்த அறைகளில் இருந்து வெளியே வந்து, நல்ல காற்றை சிறிதுநேரம் சுவாசிப்பதற்குக் கூட இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக இவர்கள் அனைவரும் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றனர். அச்சமயங்களில் உரிய மருத்துவ உதவியினை இவர்களுக்கு அளிக்க மறுத்து வருகின்றனர் சிறை அதிகாரிகள். மாற்றி உடுத்திக் கொள்ள துணிமணிகளும் கடந்த இரு வருடங்களாக இவர்களுக்கு வழங்கப்படவில்லை. அகதிகளுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் அனைத்திலும் ஊழல் புகுந்து விளையாடுகிறது.



இந்த ஈழத் தமிழ் அகதிகளுள் ஒன்பது பேரின் மீது வழக்கு நடைபெற்று வருகின்றது. நீதிமன்றம் இவர்களுக்குப் பிணை வழங்கி விட்ட போதும், போலீசு வெளியே விட மறுத்து வருகிறது. மேலும் நீதிமன்ற விசாரணைக்கு முறையாக அழைத்துச் செல்லாமல் வழக்கை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது போலீசு. இவர்கள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டால் கிடைக்கும் தண்டனையை விட அதிகக் காலம் இச்சிறப்பு முகாமில் அடைபட்டுக் கழித்து விட்டனர். இது ஈழத் தமிழர்களுக்குத் தமிழகத்தில் நீதி மறுக்கப்படுவதையே காட்டுகிறது.

மேலூரில் மட்டுமின்றி, வேலூர் திப்பு மகாலிலும், செங்கல்பட்டு கிளைச் சிறையிலுமுள்ள சிறப்பு முகாம்களில் 87 ஈழத் தமிழர்கள் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தி வருகிறது தமிழக அரசு. இந்த அப்பட்டமான மனித உரிமை மீறல் குறித்து, இவர்கள் தேசிய மனித உரிமைக் கமிஷனிடம் அளித்த மனுக்கள் அனைத்தும் கிணற்றில் போட்ட கல்லாகிப் போயின. சட்ட விரோதமாகத் தொடரும் இச்சிறை வாழ்வில் இருந்து விடுபடவே, பல அகதிகள் சிறப்பு முகாம்களில் இருந்து தப்பி விடுகின்றனர்.

1989-91-ம் ஆண்டில் கருணாநிதி பதவியில் இருந்த பொழுது, ஜெயா - சோ போன்ற பார்ப்பன பாசிஸ்டுகள் புலி பீதியூட்டி அவரது ஆட்சியைக் கலைக்க முயன்றனர்; அப்பொழுது தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இச் சிறப்பு முகாம்களை உருவாக்கி ஈழத் தமிழர்களைச் சிறை வைத்தார், அவர். பின்னர் ஜெயா ஆட்சியின் பொழுதோ, "சட்ட விரோதமாக அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யவேண்டும்" எனத் திடீர்ப் பரிவு காட்டினார்;

மீண்டும் அரியணை ஏறிய பின்பு இப்பிரிவு காணாமல் போன இடம் தான் தெரியவில்லை. ஈழத் தமிழ் அகதிகளைத் தொடர்ந்து சிறப்பு முகாம்களில் காவலில் வைத்திருப்பதும், புலிகளுக்குத் தமிழகத்தில் இருந்து உதவிகள் கிடைக்காமல் தடுப்பதும்தான் தி.மு.க. அரசின் கொள்கைகளாக உள்ளன. "தமிழுக்குத் தனித் துறை; ஈழத் தமிழருக்குத் தனிச் சிறை" - இதுதான் கருணாநிதியின் (அ)நீதி போலும்!

★ ★ ★ ★

• யாழ் பகுதி மக்கள் புலிகளை எதிர்த்து மோதி, அதன் பிறகே தங்களின் பிறந்த பூமிக்குத் திரும்பினர்; எனினும் அவர்கள் எந்தவொரு தமிழ்த் துரோகக் குழுவினையும் தங்களது தலைமையாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

• இலங்கையின் மின்சாரத் துறையைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்து, 14500 மின்சாரத் தொழிலாளர்கள் சமீபத்தில் மிகப் பெரிய வேலை நிறுத்தத்தை தென்னிலங்கையில் நடத்தினர்; இதற்கு ஆதரவாகத் தனியார் மயமாக்கலை எதிர்க்கும் பல்வேறு அரசு நிறுவனங்களின் ஊழியர்கள் - தொழிலாளர்கள், கூட்டுத் தொழிற்சங்கத் தலைமையில் போராட்டத்தில் இறங்கினர்.

• மின் பற்றாக்குறை, குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தென்னிலங்கை எங்கும் வெடித்துப் பரவி வருகின்றன..

• தமிழ் - சிங்களவர்கள் வேறுபாடின்றி 5 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் அடிப்படை உரிமைகளுக்காக கடந்த ஏப்ரல் மாதம் ஒரு வார அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

• அமெரிக்க அமைக்கவுள்ள ஒலிபரப்பு நிலையத்தை எதிர்த்து புத்தளம் விவசாயிகள் நடத்திய போராட்டம், சந்திரிகா அரசைப் பேச்சு வார்த்தைக்கு இறங்கி வரச் செய்தது.

இச்சாதக - பாதக அம்சங்களைக் கணக்கில் கொண்டு, "ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நிற்கும் குழுக்களை, ஈழ மக்கள் மத்தியில் இயங்குவதற்கு அனுமதிக்கப் புலிகளின் தலைமைக்கு நிர்பந்தம் கொடுப்பது; அதற்கு இணங்க மறுக்கும் புலிகளின் பாசிசப் போக்கை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவது; யாழ் பகுதி மக்களை அரசியல் ரீதியில் அணி திரட்டும் பொழுது, மக்கள் யுத்தப் பாதையில் அமைந்த கொரில்லாக் குழுக்களைக் கட்டுவது; புலிகளின் முதலாளித்துவ இராணுவ பாணியில் அமைந்த கொரில்லா குழு கட்டும் முறையைக் கை விடுவது; தங்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக சந்திரிகா அரசை எதிர்த்துப் போராடி வரும் சிங்களத் தொழிலாளர்களை ஆதரிப்பது; இதன் மூலம் ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவாக அவர்களை அணி திரட்டுவது" போன்ற உடனடிப் பணிகளை முனைந்து செயல்படுத்த வேண்டிய தருணமிது.

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# தொடர் 'கற்பழிப்பு'களால் கேரளாவெங்கும் பீதி

நடந்து முடிந்த தேர்தலுக்குச் சற்று முன்பாக, மார்ச் மாதம் வெளி உலகுக்குத் தெரிய வந்த சூரியநெல்லி தொடர் பாலியல் வன்முறை கேரளா முழுவதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சூரியநெல்லி கிராமத்தைச் சேர்ந்த 14 வயது பள்ளிச் சிறுமியை காதலிப்பதாக ஏமாற்றிய ஒரு பேருந்து நடத்துநர், அச்சிறுமியிடம் உடலுறவு கொண்டு விட்டு தனது நண்பனிடம் ஒப்படைத்தான். அதன்பின் குறுகிய காலத்தில் கல்லூரி பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், அரசியல்வாதிகள் என நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் தொடர்ச்சியாக பாலியல் வன்முறைக்கு அச்சிறுமியை உட்படுத்தியுள்ளனர்.

இதைத் தனது பிரச்சாரத்தில் பயன்படுத்தி வெற்றி பெற்ற 'இடது முன்னணி' ஆட்சியிலும் இதே போன்ற சம்பவங்கள் தொடர்வது மட்டுமின்றி அதிகரித்தும் வருகின்றன.

• மே 31-ம் தேதி மூளை பாதிக்கப்பட்ட 16 வயதுச் சிறுமி பாலக்காட்டிலுள்ள தனது வீட்டிலிருந்து காணாமற் போய்விட்டாள். மூன்று நாள் கழித்து திரும்பி வந்தாள். அவளிடம் விசாரித்த போது தெரிய வந்த விவரங்கள்: யாரோ கடத்திச் சென்றுள்ளனர். எந்த இடம் எனத் தெரியாது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் என மாற்றியுள்ளனர். தொடர்ச்சியாக முப்பது பேருக்கும் மேற்பட்டவர்கள் அவளைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளனர்.

• அதே மே 31-ம் நாளில் இடுக்கியிலுள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 17 வயதுப் பெண் கடத்திச் செல்லப்பட்டாள். ஐந்து நாள் கழித்து மிக மோசமான - இரங்கத்தக்க நிலையில் அவளது வீட்டருகே விடப்பட்டாள். அப்பெண்ணால் பேசக்கூட முடியவில்லை.

• கடந்த ஜனவரியிலிருந்து ஜூன் முடிய ஆறு மாத காலத்தில் சுமார் பத்துப் பனிரெண்டு தொடர் பாலியல் வன்முறைகள் நடந்துள்ளதாகக் காவல்துறை ஒப்புக் கொள்கிறது. பாதிக்கப்பட்டவர்களில் 11 மாதமேயான கைக்குழந்தையும், 75 வயது மூதாட்டியும், ஒரு சுற்றுலாப் பயணியும் அடங்குவர்.



சூரியநெல்லிச் சிறுமியைப் பாலியல் பலாத்காரப்படுத்திய கயவர்கள்

நமது பொழுது போக்கு சாதனங்கள் அனைத்துமே பெண் என்பவள் பாலியல் சுகத்திற்கான ஒரு சாதனம் என்ற கருத்தையே முன் வைக்கின்றன. குறிப்பாக திரைப் படங்களில் காதல் என்ற பெயரில் பாலியல் வக்கிரங்களைப் புகுத்தியுள்ளனர். "இவற்றைப் பார்க்கும் படித்த இளைஞர்களும், பெண்களும் விடலைப் பருவ மோகம்தான் காதல் என்ற தவறான கருத்துக்கு வந்து விடுவதும் இந்தத் தொடர் பாலியல் வன்முறைகளுக்கு ஒரு காரணம்" என்கிறார் சுகதகுமாரி. இவர் ஒரு கவிஞரும் சமூக சேவகியுமாவார். சமீபத்தில் அமைக்கப்பட்ட பெண்கள் கமிசனின் தலைமைப் பொறுப்புக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிலேயே கல்வி கற்றவர்கள் மிகுந்துள்ள மாநிலம் கேரளா. பெண் கல்வி விகிதம் மிக அதிகம். ஆயினும் இந்த முதலாளித்துவ கல்வி சமூக ஒழுக்கத்திற்கு எவ்வகையிலும் உதவவில்லை என்பதையே சுகதகுமாரியின் கூற்று நிரூபிக்கிறது.

"காவல் துறையும் ஒரு முக்கிய காரணம். இவர்களில் பெரும்பாலானவர்கள் விபச்சாரம் செய்பவர்களுடனும் நீலத் திரைப்படம் எடுப்பவர்களுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர்" என மேலும் கூறுகிறார் சுகதகுமாரி. இதனால் குற்றவாளிகள் மிகவும் எளிதாகக் குற்றங்களைச் செய்து தப்பிவிடுகின்றனர்.

"இந்தத் தொடர் பாலியல் வன்முறைகள் இதற்கு முன் நடக்கும் கும்பல் பாலியல் வன்முறைகளிலிருந்து மாறுபட்டது. இது திட்டமிட்ட முறையில் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பாலியல் வன்முறையும் 'வீடியோ' அல்லது புகைப்படத்தில் பதிவு செய்யப்படுகிறது. பின் அவற்றை வைத்து மிரட்டி 'திரும்பத் திரும்ப தமது இச்சைக்குப்' பயன்படுத்த முனைகின்றனர்" என்கிறார் டாக்டர் ஜேம்ஸ் வடக்கும் செரி என்கிற காவல் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்.

உயர் மட்ட இராணுவ அதிகாரியின் 13 வயது சிறுமியை சில மாதங்களாக மேலே கண்ட முறையில் மிரட்டி பணிய வைத்த ஒரு கும்பல், அதை வைத்து அவளது தாயையும் மிரட்டிய போது பிடிபட்டதை ஆதாரமாகக் கூறுகிறார் இவர்.

சூரியநெல்லி சம்பவத்தை வைத்து அரசியல் ஆதாயமடைந்த சி.பி.எம். கட்சி பெரிய அளவு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. ஏற்கனவே 1987-ல் தங்கமணி கிராமத்தில் நடந்த கும்பல் பாலியல் வன்முறை பற்றி 'அமெரிக்காவில் இது பெரிய விசயமேயில்லை. இதெல்லாம் டீ குடிப்பதைப் போல' எனக் கூறினார், அன்று முதல்வராயிருந்த ஈ.கே.நாயனார். இன்றும் இவர்தான் முதல்வர். ஏற்கனவே "பாலியல் வன்முறை என்பது நமது மரபணுக்களிலே உள்ள ஒன்றுதான். பத்திரிகைகள்தான் இவற்றைத் தேவையின்றி பெரிதாக்குகின்றன" என்ற 'பொன்மொழி'யை



படிப்பகம்

www.padippakam.com

உதிர்த்துள்ளார். போலிக் கம்யூனிஸ்டுகளிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

இன்று கேரளாவிலிருந்து அரபு நாடுகளில் வேலை பார்ப்பவர்களுடைய எண்ணிக்கை கணிசமாக உள்ளது. அங்கிருந்து பெருமளவில் பணம் வருகிறது. அவர்களின் குடும்பத்திலுள்ள இளைய தலைமறையினரோ இந்த அதிகளவு பணத்தைக் கொண்டு ஐந்து நட்சத்திர சீரழிவுப் பண்பாட்டுக்கு அடிமையாகியுள்ளனர்.

இதனாலேயே போதைப் பழக்கங்களும், ஆபாச நீலத் திரைப்படங்கள் பெருகி, பாலியல் வக்கிரங்களும் அதிகரித்துவிட்டன. இந்த சீரழிந்த கும்பல், இன்று நடந்து வரும் தொடர் பாலியல் வன்முறைகளுக்கு அடிப்படையாக விளங்குகின்றன.

சி.பி.எம். கட்சியினர் தொடர்ந்து பலமுறை கேரளாவில் ஆட்சியில் இருந்துள்ளனர். வலுவான தொழிற்சங்க அமைப்பும், மாணவர், இளைஞர் அமைப்புகளும், பெண்கள் அமைப்பும் இருப்பதாக வேறு பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால் இப்படிப்பட்ட சீரழிந்த சமூகப் பண்பாடுகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இதுவரை இவர்களின் கட்சியோ, பிற அமைப்புகளோ என்ன போராட்டங்களை நடத்தியுள்ளன? இத்தகைய சீரழிவுகளுக்கு எதிராகப் போராடாத சி.பி.எம். கட்சிக்கு தன்னை கம்யூனிஸ்ட் கட்சி என அழைத்துக் கொள்ள எந்தத் தகுதியுமில்லை.

• கதிரவன்

வாசகத் தோழர்களுக்கு,

அடுத்து வரும் இதழ் தொடங்கி நமது இதழில் மீண்டும் கேள்வி-பதில் பகுதியினைத் தொடங்குவது எனத் தீர்மானித்துள்ளோம். மேலாதிக்க மற்றும் உள்நாட்டு பாசிச சக்திகளின் தாக்குதல் அதிகரித்து வரும் இச்சூழலில், பல்வேறு அரசியல் - பொருளாதார - கலாச்சார போக்குகள் குறித்து மார்க்சிய - லெனினிய அடிப்படையில் விரிவாகவும் ஆழமாகவும் விளக்குவதற்கு கேள்வி - பதில் பகுதி கூடுதல் வாய்ப்பளிக்கக் கூடிய ஒன்றாகும். அதே பொழுதில் அப்பகுதி தொடர்ந்து வெளி வருவதற்கு வாசகர்களின் பங்களிப்பே பிரதானமானதாகும். மேலும், பு.ஜ. இதழ் மேலும் அதிக மக்கள் திரளை எளிதாகச் சென்றடையும் வண்ணம் வடிவம் - உள்ளடக்கத்தில் மாறுதல் செய்வது, புதிய பகுதிகள் தொடங்குவது குறித்தும் வாசகர்களிடமிருந்து ஆலோசனைகளை எதிர்பார்க்கிறோம்.

அன்புடன்,
ஆசிரியர் குழு.

# காந்தி - நேதாஜி - நேரு - பட்டேல் 'தேசிய'ப் பாரம்பரியத்தின் ஊழல் வரலாறு

இக்கட்டுரையின் முதல் பகுதியில் காங்கிரசு மூத்த தலைவர்களான காந்தி - நேதாஜிக்கு இடையேயும், நேரு - பட்டேலுக்குமிடையேயும் இருந்து வந்த கோஷ்டித் தகராறுகள் குறித்தும்; எதிர்க் கோஷ்டியைக் கவிழ்ப்பதற்காகவே 'சுதந்திர' போராட்டம் எனும் பெயரில் டாடா, பிர்லா, பஜாஜ் போன்ற தரகு முதலாளிகளிடம் இரகசியமாக நிதி பெற்று வந்தனர் என்பதையும் அம்பலப்படுத்தியிருந்தோம். ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி முதலாளிகளுக்கு சலுகைகளை வழங்கி, இலஞ்சம் வாங்கியதைத் தொடங்கி வைத்தவர் நேரு தான் எனவும் குறிப்பிட்டிருந்தோம். இனி...

தமிழ்நாட்டுப் பார்ப்பன அறிவுஜீவிகள், பத்திரிகைகளால் வழி நடத்தப்படும், "அனைத்திந்திய தேசியவாதிகள்" ஏறக்குறைய ஒரு முப்பதாண்டு காலமாக ஒரு பொய்யான கருத்தைத் திட்டமிட்டுப் பரப்பி வருகிறார்கள். "திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்துதான் இங்கே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், ஆடம்பரக் கேலிக் கூத்துகள், அன்றாட அரசு நிர்வாகத்தில் ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடுகள், தேர்தல் விரயங்கள் பெருகிவிட்டன. அதற்கு முன்பு, குறிப்பாக இராஜாஜி, காமராஜ் ஆட்சி தூய்மையானதாக, நேர்மையானதாக, திறமையானதாக இருந்தது. மீண்டும் ஒரு தேசியக் கட்சியின் ஆட்சி ஏற்பட்டால் தான் தமிழ்நாட்டில் நிலவி வரும் அவலங்கள் நீங்கும்" என்பதுதான் அந்தப் பொய்.

ஆனால் கட்சி நிதி என்ற பெயரில் பெருமுதலாளிடம் வசூல் வேட்டை நடத்துவது காந்தி, நேதாஜி காலத்திலிருந்து துவங்கி விட்டதைக் கடந்த இதழில் பார்த்தோம். நேரு தலைமையில் காங்கிரசு ஆட்சி அமைந்ததில் இருந்து அந்தப் போக்கு பன்மடங்கு பெருகிவந்ததே தவிரக் குறையவில்லை. நேருவின் பரம்பரை வாரிசுகளான இந்திரா, ராஜீவ் ஆட்சியில் இலஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் தலைவிரித்தாடின. இந்த விசயங்களில் நரசிம்மராவ் பல சாதனைகளையும் படைத்தார்.

நேருவின் அந்தரங்கச் செயலாளராகப் பல ஆண்டுகள் வேலை செய்தவர் எம்.ஓ. மத்தாய். இவர் ஓய்வு பெற்ற பின் நேருவின் இரகசியங்கள் பலவற்றை நூலாக எழுதிப் பிரபலமடைந்தார். "பண விவகாரங்களில் தனது கரங்கள் கறைபடியக் கூடாது; சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் நேரு அக்கறை காட்டினார். ஆனால் கட்சிக்காகவும் தான் அக்கறை காட்டும் விவகாரங்களுக்காகவும் வசூல் வேட்டையாடுவதனால் மற்றவர்களின் கரங்களில் கறை படுத்திக் கொள்வதில் அவருக்கு ஆட்சேபனை இல்லை" என்று அந்த நூலில் மத்தாய் எழுதுகிறார்.

"பண்டிட்ஜி விரும்பினால் பிரபல தொழிலதிபர்களிடமிருந்து ஒரு மைய நிதி வசூலித்துத் தருவதாக" 1955-இல் ஜி.டி.பிர்லா முன் வந்தார். நேருவும் அதற்கு ஒப்புதல் தெரிவித்தார். காங்கிரசின் மையத் தேர்தல் நிதியின் இலக்குக்கு மேல் 25 இலட்சம் வசூலிக்கப்பட்டது" என்கிறார் மத்தாய். இலக்கு எவ்வளவு என்று குறிப்பிடவில்லை. 40 ஆண்டுகளுக்கு முன் இதன் மதிப்பு எவ்வளவு என்று சொல்ல வேண்டியதில்லை.

பேரா. ஸ்டான்லி. ஏ. கோசாநெக் என்பவர் "இந்தியாவில் அரசியலும் தொழிலதிபர்களும் (1974)" என்ற நூலை எழுதியுள்ளார். ஒவ்வொரு முறையும் இந்தியப் பொதுத் தேர்தல்களுக்கான செலவுகள் பல பத்து

இந்திராவின் வசூல் தரகன் டி.பி.மிஸ்ரா





படிப்பகம்

www.padippakam.com

மடங்குகள் அதிக சித்து வருகின்றன. 1962 தேர்தல்களில் 23 கோடி ரூபாயாக இருந்தது 1967-இல் 66 கோடி ரூபாயா னது என்று அந்த நூலில் கோசாநெக் குறிப்பிடுகிறார். தொழில் அதிபர்க ளிடம் இருந்து வசூ லிக்கப் படும் பெரும் தொகை காங்கிரசுக்குத்தான் போனது. அதிகார வர்க்கத்தினரையும் அமைச்சர்களையும் அணுகி காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும், சட்டமன்றங்கள், நாடா ளுமன்றத்தில் தங்கள் நலனுக்காக வாதாடவும் ''சோசலிசவாதிகள்'' என்று சொல்லிக் கொண்டே காங்கிரசு எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களுக்கு சில தொழிற் குடும்பங்கள் ''மாமூல்'' செலுத்தி வந்தன. இவை கோசநெக் தரும் தகவல்கள்.





**மொரார்ஜி-காமராஜின் வசூல் வேட்டைக்காரர்கள்: எஸ்.கே.பாட்டீல், அதுல்யா கோஷ், சி.பி.குப்தா.**

1969-இல் ''சிண்டிகேட்'', ''இண் டிகேட்'' என்று இரண்டாக காங்கிரசு பிளவுபட்டது. ''இண்டிக்கேட்''டுக்கு இந்திரா காந்தி தலைவர். ''சிண்டி கேட்''டுக்கு மொரார்ஜி தேசாய் தலை வர். காமராஜர், நிஜலிங்கப்பா, சஞ்சீவ ரெட்டி, மொரார்ஜி தேசாய் ஆகிய அர சியல் தலைவர்களை உள்ளடக்கியி ருந்த ''சிண்டிகேட்''டின் உண்மை யான முதுகெலும்பு பம்பாயின் எஸ்.கே. பாட்டீல், உ.பி.யின் சி.பி. குப்தா, மேற்கு வங்கத்தின் அதுல்யா கோஷ். ஏனென்றால் இவர்கள் மூவ ரும் பெரும் தொழில் அதிபர்களிடமி ருந்து மாமூல் வசூலிக்கும் பணமூட் டைகளாக இருந்தவர்கள். கரைபடி யாத கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் என்று புளுகப்படும் காமராஜர், நேரு, மொரார்ஜி ஆகியோரின் வளர்ப்புப் பிராணிகள். இவர்கள் மூவரும் ''சிண் டிகேட்''டுக்கு தலைவரானதும் கட்சி ''கஜானா''வை இழந்து விட்ட ஆத்தி ரத்தில் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' கோயங்காவுடன் சேர்ந்து இந்திரா வசைபாடியதே இதற்கெல்லாம் ஆதா ரமாகும்.

அதன் பிறகு, பம்பாயில் ரஜினி பட்டேல், மத்தியப் பிரதேசத்தில் டி.பி.மிஸ்ரா, பீகாரில் லலித் நாரா யண் மிஸ்ரா ஆகிய மூன்று பேரையும் தனக்குரிய மாமூல் வசூல்காரர்களாக நியமித்தார் இந்திரா காந்தி. மத்தியப் பிரதேசத்தில் பருப்பு வர்த்தக ஊழ லில் சிக்கி டி.பி.மிஸ்ராவும், மராட் டிய சிமெண்ட் உரிமை ஊழலில் ஏ.ஆர். அந்துலேவுடன் சிக்கி ரஜினி பட்டேலும், பாண்டிச்சேரி கம்பெ னிக்கு ஏற்றுமதி - இறக்குமதி உரிமம் வழங்கிய ஊழலில் எல்.என். மிஸ்ரா வும் சிக்கி நாடு முழுவதும் நாறியது.

ரஜினி பட்டேலின் சாவுக்குப் பிறகு முரளி தேவ்ராவும், எல்.என். மிஸ்ரா கொலைக்குப் பிறகு சீத்தாராம் கேசரியும் இந்திராவின் மாமூல் வசூல் வேட்டைக்காரர்களானார்கள். நகர் வாலா மோசடியில் இருந்து ஜப்பா னிய எண்ணெய் இறக்குமதி பேர ஊழல் வரை ஏறக்குறைய 15 ஆண்டுக ளில் நூற்றுக்கணக்கான இலஞ்ச - ஊழல், மோசடி, அதிகார முறைகேடு களில் இந்திராவும் அவரது கட்சிக்கா ரர்களும் அம்பலப்பட்டனர். அவசர நிலை பாசிச ஆட்சி, சஞ்சய் காந்தியின் கிரிமினல் குண்டர் படைத் தாக்குதல் ஆகியவற்றைக் கொண்டு நேரு - இந் திரா குடும்ப அயோக்கியத் தனங்கள் மூடி மறைக்கப்பட்டன.

நேருவின் அமைச்சரவையில் இருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரியின் முந்திரா ஊழல், பஞ்சாபில் பிரதாப் சிங் கைரோன், காஷ்மீரில் பக்ஷி குலாம் முகமது, ஆந்திராவில் சஞ் சீவ ரெட்டி, ஒரிசா வில் பிஜுபட்நா யக் ஆகிய முதல மைச்சர்களின் ஊழல்கள் அப் போதே நாடு முழு வதும் அம்பலமாகி நாறின.

நேருவின் வாரிசு இந்திராவின் காலத்தில் ஏறக்கு றைய எல்லா மாநி லங்களிலும் அதிகார வெறியர்களும் ஊழல் பெருச்சாளிகளுமே முதல்வர்க ளாக இருந்தனர். கேரளாவில் கருணா கரன், கர்நாடகவில் தேவராஜ் அர்ஸ், ஆந்திராவில் சென்னா ரெட்டி, நரசிம் மராவ், மராட்டியத்தில் அந்துலே, சரத் பவார், ஒரிசாவில் நந்தினி, ஜே.பி. பட் நாயக், ம.பி.யில் அர்ஜுன் சிங், சுக்லா சகோதரர்கள், ராஜஸ்தானில் சுகாடியா - பகாடியா, உ.பி.யில் திவாரி, திரி பாதி, பஞ்சாபில் ஜெயில் சிங் - பியந்த் சிங், பீகாரில் ஜெகன்னாத் மிஸ்ரா, மேற்கு வங்கத்தில் சித்தார்த்த சங்கர் ரே, அசாமில் சைக்கியா ஆகியோர் இத்தகையவரே. இந்திரா காங்கிரசின் மாநில முதல்வர்களில் யோக்கியமா னவர்கள் என்று எவரையும் தேசியப் பாரம்பரியம் காட்டவே முடியாது.

மொரார்ஜி தலைமையிலிருந்த சிண்டிகேட்டை ஒழிப்பதற்காக, இந் திரா காந்தி ஒரு சட்டம் கொண்டு வந் தார். அதன்படி அரசியல் கட்சிகளுக்கு தொழில் கம்பெனிகள் நன்கொடை கள் தருவது தடை செய்யப்பட்டது. உண்மையில் இதன் நோக்கம், அதிகா ரத்திலிருக்கும் தான் மட்டுமே நிதி வசூலித்துக் கொள்வதை ஏகபோக மாக்கிக் கொள்வதுதான்.

இதே போல, ராஜீவ் காந்தி ஆட் சிக்கு வந்ததும், ஒரு விதி கொண்டு வந்தார். அரசுடனான உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பெனிகள் வர்த்தக பேரங்களை நடத்தும் போது இடைத் தரகர்கள் எவரையும் வைத்துக் கொள் ளக் கூடாது என்று அவர் உத்திரவு போட்டார். இதன் மூலம் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் நடை பெறுவதற்கான வாய்ப்புகளைத் தடைசெய்து விட்டதாக பீற்றிக் கொண்டார். ஆனால் போஃபோர்ஸ் பீரங்கி பேர ஊழல், ஜெர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல் பேர ஊழல், செக் கோஸ்லாவாக்கிய துப்பாக்கிகள் பேர ஊழல் போன்றவை அம்பலப்பட்ட

**நரசிம்ம ராவின் வசூல் தரகர்கள்**


சீத்தாராம் கேசரி


முரளி தேவ்ரா



படிப்பகம்

www.padippakam.com

போது ராஜீவ் கும்பல் நேரடியான இடைத்தரகர்களாக இருப்பர், வேறு இடைத்தரகர்கள் கூடாது என்பதுதான் அந்தத் தடை உத்திரவு என்பது வெட்ட் வெளிச்சமானது.

காங்கிரசுக்கு மாற்றுக் கட்சியாக தேசியப் பாரம்பரிய உரிமை பாராட்டும் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்த ஒரு சில மாநிலங்களிலும், ஒரு குறுகிய காலத்திலேயே இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளிலும் பதவி வெறி நாய்ச் சண்டையிலும் சிக்கி நாறுகிறது.

காங்கிரசுக்கு முரளி தேவ்ராவைப் போல பாரதீய ஜனதாவின் வசூல்வேட்டைக்காரனாக, பம்பாய் பெருநகரின் கட்சித் தலைவனாக இருப்பவர் புரமோத் மகாஜன். மராட்டியத் துணை முதல்வர் கோபிநாத் முண்டேயின் மைத்துனர். மத்தியில் வாஜ்பாயி பிரதமராவதற்கு முன்பு மிக ஆடம்பரமான பம்பாய் பூனா மாநாட்டை நடத்திக் காட்டியவர். மாநாட்டு மேடையிலேயே எதிர்க்கோஷ்டிக்கு சவால்விட்டு மிரட்டியவர். இவரது பணவலிமைக்காகவே, கட்சி மாறிகளை இழுப்பதற்காக வாஜ்பாயி அரசின் நாடாளுமன்ற விவகார மந்திரியாக்கப்பட்டார். பார்சி - பனியா - மார்வாரி முதலாளிகளிடம் நேரடியாகவே பணவசூல் நடத்துபவர்.

புரமோத் மகாஜனுக்கு அடுத்து பாரதீய ஜனதாவின் வசூல்காரர் லக்கிராம் அகர்வால். இவர் மத்தியப் பிரதேசத்தின் முக்கியத் தொழில்களில் ஒன்றான பீடி இலை வியாபாரத்தில் பெரிய புள்ளி; ஒப்பந்தக்காரர். ம.பி.யின் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருமுன் அங்குள்ள கூட்டுறவு சங்கங்கள் 404.74 கோடி ரூபாய்க்கு பீடி இலை வியாபாரம் செய்து, அதில் 290 கோடி ரூபாய் இலாபமீட்டின. ஆனால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் தனியார் பீடி இலை வியாபாரிகளுக்கு உரிமையளித்து, கூட்டுறவு சங்கங்களின் இலாபத்தை ஆண்டுக்கு 290 கோடியில் இருந்து வெறும் 30 கோடி ரூபாய்க்கு வீழ்த்தியது. இதனால் தனியாருக்குக் கிடைத்த இலாபத்தில் பா.ஜ.க. பங்கு போட்டுக் கொண்டது.

தரகு பெருமுதலாளி வீரேன் ஷா, ராஜஸ்தான் முதல்வர் செகாவத், டெல்லி வீடியோ முதலாளி ஜெயின் ஆகியோர் பாரதீய ஜனதாவின் வேறு பிற வசூல் வேட்டைக்காரர்களாக உள்ளனர்.

பாரதீய ஜனதாவைப் போலவே, கன்ஷிராம், முலயம் சிங், லல்லுப்பிரசாத் ஆகியோருக்கும் வசூல் பிரதி நிதிகளாகப் பெரும் புள்ளிகள் உள்ளனர். கன்ஷிராமுக்கு பெரு முதலாளி ஜெயந்த் மல்கோத்ராவும், முலயம் சிங்குக்கு இன்னொரு பெரு முதலாளி சஞ்சய் டால்மியாவும் அரசியல் தரகர்களாகவும் வசூல் வேட்டைக்காரர்களாகவும் உள்ளனர். இதேபோலத்தான் ஜெயலலிதாவுக்கு விஜய் மல்லையா, உடையார், சிதம்பரம் செட்டியார் என்று பலரும் பணமூட்டைகளாக உள்ளனர்.



**பிரமோத் மகாஜன் பாரதீய ஜனதாவுக்காக பார்சி-பனியா-மார்வாரி முதலாளிகளிடம் நேரடியாகவே பணவசூல் நடத்துபவர்**

ஒவ்வொரு மாநிலத்திலும் சிறப்பான மிகப்பெரிய முக்கிய தொழில்களில் ஆதிக்கம் வகிப்பவர்கள் அம்மாநில அரசியலையே ஆட்டிப் படைப்பவர்களாக உள்ளனர். உதாரணமாக கேரளத்தில் தோட்டத்தொழில், மீன்பிடி மற்றும் கள்-சாராயத் தொழில் முதலாளிகள், கர்நாடகாவில் உயர்ரக மது தயாரிப்பாளர்கள்; தமிழ்நாட்டில் சாராய மற்றும் பஸ் அதிபர்கள்; ஆந்திராவில் சாராய மற்றும் புகையிலை வியாபாரிகள்; மராட்டியத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அதிபர்கள்; குஜராத்தில் சமையல் எண்ணெய் மற்றும் பயிறுவகை வியாபாரிகள்; மத்தியப் பிரதேசத்தில் பீடி இலை ஒப்பந்தக்காரர்கள்; உ.பி.யில் சர்க்கரை மற்றும் தோல் தொழிலதிபர்கள் இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியல் கட்சிகள் சில பிரிவு தொழில் ஆதிக்கக்காரர்களின் பணத்துக்காக வாய்பிளந்து நிற்கின்றன. அந்தந்த மாநிலங்களின் தேர்தல் செலவுகள் மட்டுமல்ல, முதல்வர்கள் - அமைச்சர்களாக யார் யார் வருவது, ஆட்சிகள் அமைவது - கலைவது என சகலவற்றையும் இவர்கள்தாம் தீர்மானிக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக இந்திய அரசியலில் இன்னொரு அம்சமும் வளர்ந்து வருகிறது. அரசியல் கிரிமினல் மயமானதைத் தொடர்ந்து பல மாநில அரசியலையும் கிரிமினல் குற்றக்கும்பல்கள் கட்டுப்படுத்தும் அளவுக்கு மாறி வருகிறது. பம்பாயின் தாவூத் இப்ராகிம், அருண் கௌலி, அமர் நாயக், சோட்டா ராஜன் ஆகியோர் காங்கிரசு, பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி ஆகிய இரண்டு எதிரெதிர் அணிகளின் பின்பலமாக உள்ளனர். இதேபேர்ல உ.பி., பீகார், அரியானா, ம.பி. மாநிலங்களை ஆட்டிப் படைக்கும் குற்றக் கும்பல்களுடன் பாரதீய ஜனதா, காங்கிரசு, ஜனதா தளம் ஆகிய தேசியக் கட்சிகள் மட்டுமல்ல; பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி, சமதா கட்சி ஆகிய மாநில அளவிலான கட்சிகளும் நெருங்கிய கூட்டு வைத்துள்ளன. போலிக் கம்யூனிஸ்டுகள் மேற்கு வங்கத்தில் ஆதிக்கம் வகிக்கும் ரஷீத் கான் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

ஆக, காந்தி - நேரு - பட்டேல் காலத்தில் இருந்து தேசியப் பாரம்பரியத்தின் அரசியலே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளால் அழுகி நாறுவதும், கூடவே கிரிமினல் மயமாகி வருவதும் நாடு முழுவதற்குமான போக்காக உள்ளது என்பதுதான் உண்மை. 'நாட்டில் எங்குதான் இலஞ்ச - ஊழல் நடைபெறவில்லை, எப்போதுதான் இல்லை; இராஜாஜி, காமராஜ் காலத்தில் இருந்தே இப்படிக் குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன'' என்று கழிசடை அரசியல் நாயகி ஜெயலலிதாவே எழுப்பும் கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.

இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் மட்டும்தான் இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகள் என்று கூறுவது வடிகட்டின பித்தலாட்டம். காமராஜர் ஆட்சியில்தான் ஊர்தம்மான் ஊழல்கள் அம்பலமாகி நாறின. இராஜாஜி ஆட்சி அமைந்ததே எம்.எல்.ஏக்களுக்கு மந்திரி பதவி ஆசை காட்டி கட்சிமாறிகளின் ஆதரவினால்தான். மதுவிலக்கினால் ஏற்படும் இழப்புக்கு ஈடுகட்டுவது என்ற பெயரில் இராஜாஜி கொண்டு வந்த விற்பனை வரி போன்றவை இலஞ்ச - ஊழலுக்கு, வரி ஏய்ப்புக்கு வழி வகுத்தன. ''போலீசுக்காரனுக்கு 60-ம், 70-ம் ஆக சம்பளம் நிர்ணயிக்கிறீர்களே போதுமா?'' என்று இராஜாஜியிடம் கேட்டதற்கு ''சம்பளம் இவ்வளவுதான்! மீதியை கிம்பளமாகப் பார்த்துக் கொள்ளுவார்கள்'' என்றார். இதுதான் ''தேசியப் பாரம்பரியத்தின்'' ஆட்சிச் சிறப்பு!

(முற்றும்) • ஆர்.கே.

www.padippakam.com

# "ஆசாத்" காஷ்மீரில் இராணுவவெறி இந்தியாவுடன் பாக். போட்டி

பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப் பட்ட ஆசாத் காஷ்மீரப் பகுதியாயிருந்த கில்ஜித் பிராந்தியத்தின் சிவில் நிர்வாகத்தை பாகிஸ்தான் இராணுவம் கையிலெடுத்துக் கொண்டது. காலவரையற்ற இராணுவ ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் தமது சுயாட்சிக் கோரிக்கைக்குப் போராடத் தொடங்கியதை அடுத்து அம்மக்களுக்கு பாகிஸ்தான் அளித்தது மேலே கண்ட கொடூரமான அடக்குமுறைதான்.

எலும்புத் துண்டைக் கண்ட இரு நாய்கள் பாய்ந்து சென்று கவ்விக் கொள்வதைப் போல இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரைக் கூறு போட்டுக் கொண்டன. இந்தியா தான் ஆக்கிரமித்த பகுதியை ஜம்மு - காஷ்மீர் எனவும், பாகிஸ்தான் தனது ஆக்கிரமிப்பிலுள்ள பகுதியை ஆசாத் காஷ்மீர் எனவும் குறிப்பிடுகின்றன. ஆனால் தமது சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் காஷ்மீர மக்களோ 'பாகிஸ்தான் நாய்களே வெளியேறுங்கள்! இந்திய நாய்களே வெளியேறுங்கள்!' என்று சரியான முழக்கத்தை முன் வைத்தே போராடி வருகின்றனர்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களோ காஷ்மீர மக்களின் நியாயமான போராட்டத்தை கொச்சைப்படுத்தி, பாகிஸ்தான் சதி என ஒட்டு மொத்தாக முத்திரை குத்தி இழிவு படுத்தி வருகின்றனர். லட்சக் கணக்கில் படைகளைக் குவித்து இந்தியா ஜம்மு - காஷ்மீரில் தேர்தல் நாடகம் நடத்தியதைப் போலவே பாகிஸ்தானும் ஆசாத் காஷ்மீரில் ஜூன் இறுதியில் இராணுவத்தைக் குவித்து தேர்தல் நாடகம் ஆடியது. ஆளும் கட்சியோ தனது குண்டர் படைகளை துப்பாக்கியுடன் களத்திலிறக்கி, எதிர்த்தரப்பு வேட்பாளர்களை மிரட்டி, ஓட்டு மொத்தமாகக் கள்ள ஓட்டுப் போட்டு வெற்றி பெற்றுள்ளது. ஆளும் கட்சியினர் தவிர பிற அனைத்துக் கட்சியினரும் இத்தேர்தலை ஏற்க முடியாது என அறிவித்து விட்டனர்.

பல பத்தாண்டுகளுக்கு முன்பே காஷ்மீர மாநிலத்தின் எல்லைப் பகுதியிலிருந்த கில்ஜித் பகுதியைப் பிரித்து வடக்குப் பகுதியில் இணைத்தனர் ஆட்சியாளர்கள். ஏற்கனவே கருத்துரிமை பறிக்கப்பட்ட அம் மக்கள் மனதிற்குள் குமுறி வந்தனர். அங்கிருந்த மனித உரிமைக் கழகத்தினர் தமக்கு சுயாட்சி வேண்டுமெனவும், அப்பகுதி வேலை வாய்ப்பில் கில்ஜித் மக்களுக்கே முன்னுரிமை தர வேண்டும் எனவும் போராடினர். மக்களும் பெருமளவில் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

இதற்கிடையே ஆசாத் காஷ்மீர உயர்நீதி மன்றம் கில்ஜித், பால்திஸ்தான் பிராந்தியங்களை மீண்டும் காஷ்மீர் மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்ற முக்கியமானதொரு தீர்ப்பை வழங்கியது. அதை நடைமுறைப்படுத்த மறுத்த ஆட்சியாளர்கள் அரசியல் அடிப்படைச் சட்டத்தையே திருத்தினர். இதைத் தொடர்ந்து ஏற்கனவே போராடி வந்த கில்ஜித் மக்கள் ஆயுதந்தாங்கிப் போராடத் தொடங்கி விட்டனர். இதைத் தொடர்ந்தே அங்கு இராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர காஷ்மீர் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர்களான அமிர் ஹம்சா, ஹுசைன் ஷா, ஆசன் அலி, ராயீஸ், பிரபல எழுத்தாளர் யாஹ்யா ஷா உட்பட 15 தலைவர்களும், பரவலாக மக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"கைது செய்யப்பட்டவர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லை. அவர்கள் இராணுவ முகாம்களில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். ஒரு சிலர் விடுவிக்கப்பட்டாலும் தலைவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் உயிரோடுதான் உள்ளார்களா என்று கூட தெரியவில்லை. குறிப்பாக 15 தலைவர்கள் மீது கொலை வழக்கு உட்பட பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன" என அஃப்சல் தாகிர் கூறுகிறார். இவர் இலண்டனில் உள்ள சுதந்திர காஷ்மீர் முன்னணி தலைவர்களில் ஒருவர்.

இன்றைக்கு கில்ஜித், பால்திஸ்தான் பகுதியில் தொழிற்சங்க உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நட வடிக்கையை கடுமையாக கண்டித்துள்ளனர். பிரிட்டிஷ் பாராளுமன்ற மனித உரிமைக் குழுவின் தலைவரான எரிக் ஆவ்பெரி என்பவர் "பாகிஸ்தான் அரசின் நடவடிக்கை தொழிலாளர்கள் அமைப்பின் அடிப்படை உரிமையை மீறுவதாகும். தவிர சர்வதேச தொழிலாளர் அமைப்பு வரையறுத்த கோட்பாடுகளுக்கு எதிரானதுமாகும்" எனக் கூறினார்.

சர்வதேச மனித உரிமைக் கழகமும், சர்வதேச வர்த்தக சங்க அமைப்பும், ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியும் பாகிஸ்தானின் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளன. ஆக்கிரமிப்பாளர்கள் என்றைக்குமே கருத்துக்களுக்கு காது கொடுப்பதில்லை. அவர்களுக்குத் தெரிந்தது அடக்குமுறை ஒன்றுதான். போராடுகின்ற மக்களின் பதிலடி மூலம் தான் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆப்பறைய முடியும். அது பாகிஸ்தானாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி.

● ராசு



"ஆசாத்" காஷ்மீர் தேர்தலின்போது எதிர்க் கட்சி வேட்பாளர்களை மிரட்டும் ஆளும் கட்சி குண்டர்கள்


படிப்பகம்

www.padippakam.com



டம் வரை ஊர்வலமாகச் செல்லுவதற்கு அனுமதி வழங்கியிருந்தது போலீசு. மாரீஸ் கார்னரைத் தாண்டி 250 - 300 மீ தொலைவில் உள்ள வினோதகன் மருத்துவமனைக்குச் செல்லுவதைத் தடை செய்து விட்டது.

எனினும் மாற்றுப் பாதை வழியாக வினோதகன் மருத்துவமனையை அடைந்த 300 தோழர்கள், அன்று காலை 9 மணியளவில் மருத்துவமனையைச் சுற்றி வளைத்தனர்; பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்த போலீசு பட்டாளம், எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாது தோழர்களைத் தாக்கத் தொடங்கியது. போலீசின் தாக்குதலையும் மீறி 25-க்கும் அதிகமான தோழர்கள் மருத்துவமனையின் உயர்ந்த - ஈட்டி முனை போல கூரிய இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்ட மதில் சுவரைத் தாண்டிக் குதித்து, மருத்துவமனைக்குள் புகுந்தனர்; உள்ளே நுழைந்த தோழர்களை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டு தாக்கியது போலீசு.

போலீசின் இம்மிருகத்தனமான தாக்குதலில் ஞானவேல் என்ற சிறுவன் மண்டை உடைந்து ரத்தம் சொட்ட சொட்ட பூமியில் சரிந்தான்; வாய் பேச வராத சிறுவன் என்ற போதும், அவன் போலீசின் தாக்குதலை நேருக்கு நேர் எதிர் கொண்டு மதில் சுவரைத் தாண்டிக் குதித்து மருத்துவமனையினுள் நுழைந்தான். மதிற் சுவரின் கூரிய கம்பிகள் அவன் உள்ளங்கையைப் பாளமாகப் பிளந்து விட்டபோதும் அவன் தனது மன உறுதியில் தளர்ந்து விடவில்லை. போலீசின் தாக்குதலைச் சமாளித்து மருத்துவமனையினுள் நுழைந்தவர்களுள் சுமதி என்ற சிறுமியும் குறிப்பிடத்தக்கவள்.

இத்தாக்குதலினூடேயே வினோதகன் மருத்துவமனை என்ற பெயர்ப் பலகையை உடைத்தெறிந்து, தோழர்கள் மக்கள் மருத்துவமனை என எழுதப்பட்ட "பேனரை" உயர்த்திப் பிடித்த பொழுது, தாக்குதலை நிறுத்தி விட்டு உறைந்து போயினர், போலீசார். மருத்துவமனை கைப்பற்றப்பட்ட வெற்றிச் செய்தியும், போலீசின் தாக்குதலும் உடனடியாக தஞ்சை நகரெங்கும் பறையடித்து அறிவிக்கப்பட்டது.

**நீதி விசாரணை கோரி சாலை மறியல்**

போலீசின் இத்தாக்குதலில் 12 தோழர்கள் படுகாயமடைந்தனர்; "அமைதியான முறையில் போராட வந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது, சசிகலாவுக்கு விசுவாசமாக தடியடி நடத்திய போலீசுக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி" தோழர்கள் மருத்துவமனை வாசலிலேயே சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசு அனுமதித்தப்படி தோழர். காளியப்பன் தலைமையில் வந்த ஊர்வலத்தினரும் இதே கோரிக்கையை வலியுறுத்தி, தஞ்சை நகராட்சி அலுவலகம் முன்பு சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபடத் தொடங்கினர்.

## துக்ளக் சோ - தி.க. வீரமணி இருவேறு துருவங்களா?

"... அவர் ஊழல் பணத்தில் கூட இதை வாங்கியிருக்கலாம். அதற்காக இப்படி ஒரு வன்முறைப் போராட்டம் நடத்துவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இது நியாயமான செயல்தான் என்றால், நாளைக்கு வேறு யாருடைய சொத்துக்கும் இதே மாதிரி நிலைமை உண்டாகலாம்."

-போராட்டம் பற்றி துக்ளக்-ல் சோ.

"அந்த ஆஸ்பத்திரி யாருடைய பினாமி ஆஸ்பத்திரி என்பதை கண்டுபிடித்து மக்களுக்கு விளக்க வேண்டுமே தவிர அதைத் தாக்க முற்படுவது தவறு. இதை நாம அனுமதித்தால் பிறகு எல்லாவற்றிலும் இதே நிலை வந்துவிடும்."

-போராட்டம் பற்றி 23.7.96 மாலைமலரில் வீரமணி

தோழர்களுடன் சமரசம் பேச வந்த அரசு மற்றும் போலீசு அதிகாரிகள், தடியடி முன்னெச்சரிக்கை செய்யாது நடத்தப்பட்டதை ஒப்புக் கொண்டு, தாக்குதல் பற்றி விசாரணை நடத்த உத்தரவிட்ட பிறகே சாலை மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது. அன்று மதியம் 1 மணி முடிய வெளியூர்களில் இருந்து அணிஅணியாய் வந்த தோழர்கள், போலீசின் அராஜகத்தைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்ட வண்ணமிருந்தனர்.

**சிறையிலும் தொடர்ந்த போராட்டம்**

பெண்கள், சிறுவர்கள், ஆண்கள் என 550 பேரைக் கைது செய்த போலீசார், 122 தோழர்கள் மீது கொலை முயற்சி உட்பட 9 குற்றப் பிரிவுகளின் கீழ் பொய் வழக்கு தொடர்ந்தனர். கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்

> ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்துப் புரட்சிகர அமைப்புகளின் பின்னால் அணி திரளலாம் என்ற நம்பிக்கையை இப்போராட்டம் விதைத்தது

களுள் 14 வயதுச் சிறுவன், தியாகுவும் ஒருவன்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த அன்றே, பெண்களும் சிறுமிகளும் பிணையில் விடப்பட்டனர்; பிறர் திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இரு நாட்கள் கழித்து கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தவிர, பிறர் அனைவருக்கும் பிணை வழங்கியது நீதிமன்றம். ஆனால் அத்தோழர்கள், "அனைவரையும் பிணையில் விட வேண்டும்" எனச் சிறையினுள்ளே போராடத் தொடங்கினர். போராடுபவர்களைத் தாக்கி வெளியேற்றுவதற்காக அதிரடிப்படையைக் கொண்டு வந்து குவித்தனர், சிறை அதிகாரிகள். இதனிடையே இப்போராட்டம் குறித்த செய்தி தமிழக உயர் போலீசு அதிகாரிகள், அமைச்சர்கள் - அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின் சமரசம் பேச வந்த திருச்சி மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், "கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் பிணை கோரும் பொழுது, அரசு அதனை எதிர்க்காது" என உறுதி கூறிய பிறகே, போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இரு நாட்கள் கழித்து, இவர்களுக்கும் நிபந்தனை பிணை வழங்கியது நீதிமன்றம். 122 தோழர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள பொய் வழக்குகள் (கொலை முயற்சி உட்பட 9 குற்றப்பிரிவுகள்) தவிர்த்து, பிற வழக்குகள் அனைத்தையும் தற்பொழுது விலக்கிக் கொண்டு விட்டது, தமிழக அரசு.

**போராட்டத்தின் வெற்றி**

"தமிழக திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளின் ஒட்டு மொத்த உருவமாகத் திகழும் ஜெயா - சசி கும்பலை மக்களே தண்டிப்பது" என அறை கூவி எடுக்கப்பட்ட இப்போராட்டத்தின் வெற்றி, தமிழக அரசியல் போராட்ட வரலாற்றிலேயே புதுப் பாதை காட்டுவதாக அமைந்தது. "ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து மாற்றுப் பாதையில் - புரட்சிப் பாதையில் அணி திரளலாம்" என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்தியது.

● மாரி

Published and Owned by A. SHANMUGA RAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Madras - 600 024. Editor: A. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

பதினோரு பொதுத் தேர்தல்கள், ஐம்பதாண்டு சுதந்திரம் - இவையிரண்டும் இதோ மரத்தடியில் படுத்துறங்கும் இந்த கட்டிடத் தொழிலாளிக்கு தந்தது என்ன? எதுவுமில்லை; ஆனால் பறித்துக் கொண்டதோ ஏராளம். சேலம் மாவட்டத்தில் ஏதோவொரு கிராமத்தில் பிறந்த இவருக்கு, சொந்த பூமி வறுமையால் அந்நியமாயிற்று; சென்னை நகரத்து பிளாட்பாரம் சொந்தமாயிற்று. பணம் படைத்தவனுக்கு அழகான அடுக்கு மாடி வீடு; கட்டிக் கொடுத்த இவனுக்கு மரத்தடிதான் கூடு. இன்பம் - துன்பம், நோவு - சாவு, ஊடல் - கூடல், சண்டை - சமாதானம் எல்லாமே வெட்ட வெளியில் தான்; நாலுபேர் கண்ணெதிரே தான். பங்களாக்காரனுக்குப் பயந்து அற்ப உடமைகள் மரத்தில் ஏறும்; மாநகரத்தை அழகுபடுத்தும் அதிகாரி போலீசுடன் வந்தால் தெருவில் விழும்; அடைமழை கொட்டினாலோ வெள்ளத்தோடு போகும் சொந்த முகவரியைப் பறிகொடுத்துவிட்டு, சென்னை நகரத்து நடைபாதைகளில் தஞ்சமடைந்துள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஆட்சியாளர்கள் வழங்கியது ஒன்றுதான்; ''நடைபாதைவாசிகள்'' என்ற அடைமொழிதான் அது.

இதோ நவீன வசதிகளுடன் மிகப் பகட்டாக தஞ்சாவூர் - பரிசுத்தம் நகரில் கட்டப்பட்டுள்ள இந்த ஆடம்பர மாளிகை ஜெயாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் கணவன் நடராஜனுக்குச் சொந்தமானது; இராசஸ்தான் பளிங்குக் கல் பதித்து இம்மாளிகையின் சுற்றுச்சுவரைக் கட்ட ஆன செலவே பத்து லட்ச ருபாய் பெறும். பிரதான நுழைவாயில் கதவில் அழகு செய்யும் இலை சின்னங்கள் தங்க முலாம் பூசப்பட்டவை; வெளிப்புறமே இத்துணை பகட்டென்றால், உட்புற அழகு எத்தனை கோடியை விழுங்கியிருக்கும் கிரானைட் கற்களால் மெருகூட்டப்பட்ட சுவர்கள்; குளிர் சாதனம் பொருத்தப்பட்ட அறைகள்; தங்க முலாம் பூசப்பட்ட மஞ்சள் நிற மயமான கதவுகள்; உலகத்து தொலைக்காட்சி அனைத்தையும் ஒரு சேரக் காண வசதியாக டிஷ் ஆன்டெனாக்கள்; நீச்சல் குளம் - என மைசூர் அரண்மனை கூடத் தோற்கும் வண்ணம், தங்களது உல்லாச 'வசந்த மாளிகையைக் கட்டி எழுப்பியுள்ளது ஜெயா - சசி கும்பல்.

வழி வழியாய் வந்த சொத்துக்களை விட்டுவிட்டு, பிழைக்க வழி தேடி நகரத்திற்கு ஓடி வந்து, உழைத்து ஓடாய்த் தேய்ந்தாலும் ஒண்ட இடமின்றி வாழும் அன்றாடக் கூலிகள் ஒரு புறம்; ''ஐந்து வருடத்தில் நாங்கள் அடித்த கொள்ளை இதுதான்'' எனப் பகட்டாக, திடீர்க் குபேரர்களாக வலம் வரும் ஜெயா - சசி கும்பல் மறபுறம். இந்த அநீதிக்கு நாம் முடிவு காண்பது எப்போது?

